Registered as a Newspaper in Srilanka
விலை ரூபா: 10.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | பங்குனி 5 ஞாயிற்றுக்கிழமை (19.03.2006) | தொலைபேசி 222 3378 | ஒலி 90

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# புலிகளின் தடையை நீக்க அமெ. அரசு பரிசீலிக்கும்!

## அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரி தகவல்

(வாஷிங்டன்)

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதை முற்றாக நிறுத்தியுள்ளதாக அமெரிக்க அரசு ஏற்றுக் கொள்ளும் வகையில் விடுதலைப்புலிகள் தெளிவுபடுத்தினால் அவர்கள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது. தென்னாசிய விவகாரங்கள் தொடர்பாக கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த ஆசிய நாட்டு அதிகாரி டேவிட் காம்ப் இதனைத் தெரிவித்துள்ளார். தற்போதைய நிலையில் அவர்கள் தமது நிலைப்பாடு எதனையும் தமக்குத் தெரிவிக்கவில்லையெனவும் அவர் கூறினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக் கிழக்கில்

## உள்ளூராட்சித் தேர்தல் குறித்து நாளை இறுதி முடிவு வெளியாகும்?

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது குறித்து நாளை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது குறித்து முடிவுகள் வெளியாகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அன்றைய தினம் தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுடன் கலந்துரையாடிய பின்னர் இம் முடிபினை தேர்தல் ஆணையாளர் வெளியிடுவார் என எதிர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளரின் வீட்டின் மீது மட்டக்களப்பில் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் சுயேட்சைக் குழு வேட்பாளர் ஒருவரின் வீட்டின் மீது நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கைக்குண்டுத் தாக்குதலில் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான வீடு பலத்த சேதத்துக்குள்ளானது.

இந்தத் தாக்குதல் சம் பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (சு-9)

## அன்னை பூபதி நினைவு நாள்

(கிளிநொச்சி)

இந்திய இராணுவத்திற்கு எதிராக உண்ணாவிரமிருந்து உயிர் நீத்த தியாக தீபம் அன்னை பூபதியின் 18 ஆம் ஆண்டு நினைவு நாள்மற்றும், நாட்டுப்பற்றாளர் நாள் இன்று ஞாயிற்றுக்கிழமை தமிழர்தாயகத்திலும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் எழுச்சியுடன் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வை ஒட்டி இன்று காலை 9 மணிக்கு பொதுச் சுடர், தமிழீழத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் சமாதான முயற்சிகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கும்

### பிரசாரக் கூட்டத்தில் பசீர் சேகுதாவூத்

(மட்டக்களப்பு)

சிறுபான்மைச் சமூகங்களுக்கு உரிய அந்தஸ்தையும் உரிமைகளையும் வழங்குதற்கான வாய்ப்பளிக்கும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிக்க அனைத்துச் சிறிய அரசியல் கட்சிகளும் முன்வர வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசீர் சேகுதாவூத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஏறாவூர் நகர, பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் சுயேட்சைக் குழு வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் உரையாற்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜோன் ஹன்ஸ்ஸனின் நியமனம் சமாதானத்தைப் பாதிக்காது

### நோர்வே தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு புதிய விசேட தூதுவர் நியமிக்கப்பட்டுள்ளதால், சமாதான முயற்சிகளில் எவ்வித பின்னடைவும் ஏற்படமாட்டாது என நோர்வே அறிவித்துள்ளது.

புதிய தூதுவர் நியமிக்கப்பட்டிருப்பதால் சமாதான நடவடிக்கைகள் சக்தி மிக்கதாக இருக்கும் என இலங்கைக்கான நோர்வேத் தூதரகப் பேச்சாளர் டொன் செனட்ஸ்கூஞ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான புதிய விசேட சமாதானத் தூதுவராக ஜோன் ஹன்ஸ்ஸன் பெளயர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் விரைவில் இலங்கைக்கு தனது கன்னிப் பயணத்தை மேற்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோரைச் சந்தித்துத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள் வார்.

அத்துடன் ஜெனீவாவில் நடைபெறவுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போதும் அவர் கலந்து கொள்வார் என இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதே (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 9 பேர் கடத்தல் கண்காணிப்புக்குழுவில் முறையீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் அக்குறனை வயல் பிரதேசத்தில் வேளாண்மை அறுவடையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 6 தொழிலாளர்கள் கடந்த 12 ஆம் திகதியும் நேற்று முன்தினம் மூன்று பேரும் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்து கண்காணிப்புக் குழுவில் விடுதலைப்புலிகள் முறையிட்டுள்ளனர்.

கங்கேஸ்வரன் (வயது-14), வனேஸ்வரன்(வயது-17), ரமேஸ்வரன் (வயது-21), ராமேஸ்வரன் (வயது-18), இளையராசா (வயது-22), தங்கராசா (வயது-16) ஆகியோரே கடத்தப்பட்ட ஆறு தொழிலாளர்கள் ஆவர்.

இக் கடத்தல் சம்பவத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். இதேவேளை கடந்த 17ஆம் திகதி மட்டக்களப்பு கல்லடியில் பரமேஸ்வரநாதன், காந்தசீலன் (குட்டி), கரன் ஆகிய மூவரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினராலும் அவர்களோடு சேர்ந்தியங்குகின்ற துணை இராணுவக் குழுவினராலும் இரவு 8 மணியளவில் கடத்திச் செல்லப் பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடிப்பதற்கு இவ்வாரம் அனுமதி

### இராணுவப் பேச்சாளர் உறுதி

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் களநிலைமைகள் ஆராயப்பட்டு மீன்பிடிப்பதில் உள்ள கட்டுப்பாடுகள் நீக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் அனைத்துக் கட்டுப்பாடுகளும் ஒரேயடியாக நீக்குவது நடைமுறையில் சாத்தியப்படாது எனவும் அவர் கூறினார்.


பி.பி.ஸி தமிழோசைக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

மீன்பிடிக் கட்டுப்பாடுகள் குறித்த விடயத்தில் முன்பு கூறியதுபோல இக் கட்டுப்பாடுகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்பு போடப்பட்டிருந்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)



# சிற்றின்பக் கேளிக்கைகளில் ஈடுபடுவதை விடுத்து ஆவியிலும் உண்மையிலும் இறைவனை காண்போம்

அற்புதங்கள், அதிசயங்களைக் காண்பது பலருக்கு பொழுது போக் கானதாகும். பலர் துன்பப்படுவ தைப் பார்ப்பதும் சிலருக்கு விருப் பான செயலாகும்.சிலருக்கு மற்ற வர்களை அழவைத்துப்பார்ப்பதிலே



ஓர் பிரியம். இவ் வாறே அக்கா லத்து யூதர் களும் கிரேக் கர்களும் அரு ளடையாள ங் களையும், ஞானத்தையும் காணவும் பெற்றுக் கொள்ளவும் செயற்பட்டவர்கள் மற்றவர் களின் துன்பத்தில் உதவ வேண்டியவர் கள், கைகட்டிப் பார்த்துக் கொண்டிருப் பதையும் நாம் அறிய முடியும்.

யூதருக்கு தடையாகவும், ஏனை யவர்களுக்கு மடமையாகவும் இருந்த சிலுவையானது கிறிஸ்தவர் களுக்கு மீட்பின் சின்னமாக விளங் குகின்றது. அவமானத்தின் சின்ன மான சிலுவை அருளின் சின்னமாக மாற் றப்பட்டது. இயேசுவின் உடல் சிலுவையில் பட்ட தினால் சிலுவை புனித சின்னமாகப் போற்றப்படு கின்றது. காலம் கடந்தே ஞானம் உருவாகின் றது. ஏனெனில் மனித ஞானத்தைவிட கடவுளின் மடமை ஞானம் மிக்கது. மனித வலி மையை விட இறைவனுடைய வலு வின்மை வலிமை மிக்கது.

### இறைவனின் மகிமைக்காக அனைத்தையும் செய்வோம்

நாம் செய்வது அனைத்திலும் நமது பெருமையைப் புகழை நிலைநாட்ட விளையாமல், இறைவனின் மகி மைக்காகவே அனைத்தையும் செய்யவேண்டும் என்ற மன நிலையை மனிதர் பல வேளை களில் மறந்து விடுகின்றனர். யூதர் களின் பாஸ்கா விழாவின் போது ஜெருசலேம் ஆலயத்துக்குச் சென்ற இயேசு அங்கே பரிசுத்த ஆலயத் தில் வாணிபக் கூடத்தைக் கண்

## பரமபிதாகாட்டிய பாதை

டார் பெரும் அமளியாக வாங்குவ தையும் விற்பதையும் கண்ட இயேசு வுக்கு கோபம் வரவே கயிறு களால் சாட்டை பின்னி அங்கிருந்தவர் களைக் கோவிலிருந்து விரட்டினார் என்று நற் செய்தியில் குறிப் பிடப் படுகின்றது. ஆலயம் பரிசுத்த இடம் புனிதத்தின் இருப்பிடம். ஆறு தலின் உறைவிடம், இறைவனைத் துதிக்கும் இடம். இன்றும் ஆலயங்கள் வாணி பக்கூடங்களாக முற்படுகின்றன. நவீனத்துவமும், தொழில் நுட்பமும் நாகரிகம் என்ற போர் வைக்குள் ஆலயங்களை ஆக்க முற்படுகின் றன. பணம் சம்பாதித் தல் பரிசுத்த இடங்களுக்குள் அணுகி வராது தடுத்தல் வேண்டும். அல்லது இயே சுவின் சாட்டை அடிக்கு எல்லோரும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

### இறைவன் தங்கும் உள்ளமே ஆலயம்

புனித பவுலடியார் பரிசுத்த இறைவன் தங்கும் ஆலயங்கள் நீங்களே என்று எம் உள்ளமாகிய ஆலயங்களைக் குறிப்பிடுகின் றார்.

ஆகவே எம் உடலை நாம் மாசு படுத்தாமல் பரிசுத்தமாகக் காத்துக் கொள்ள வேண்டும். தீய இச்சை களுக்கு உட்படுத்தி சிற்றின்பக் கேளிக்கைகளில் ஈடுபடுத்தி எம்மை யே நாம் அழித்துக் கொள்ளாமல் ஆவியிலும், உண்மையிலும் இறைவனைத் தொழுகின்றவர் களாக மாறவேண்டும். வெற்றுச் சடங்குகளுக்குள் மட்டும் இறைவ னைக் காணமுடியாது. பில்லி சூனியம், காம இச்சைகள், கொலை வெறி ஆதாட்டங்களில் ஈடுபடுவதை இறைவன் அடியோடு வெறுக் கிறார். இவையெல்லாம் பிறருக்கு எதிராக நாம் செய்யும் குற்றங் களாகக் கருதப்படுகின்றன.

இவையனைத்தையும் ஒழிக்க வேண்டும் என்றே புனித தவக் காலம் அருளப்பட்டுள்ளது. அரு ளின் காலமாகிய தவக் காலத்திலே ஆண்டவருக்குள் நிலைத்திருக் கவும் எம் தீய நாட்டங்கள் எல் லாம் நீங்கி இறையுறவிலும், சகோதர உறவிலும் வாழ்ந்துவர இறைவன் அருள் வேண்டு வோம்.

### இளையோர் வாழ்வுமுறை மாறவேண்டும்

'உலகை மாற்ற விரும்புகின றவர்கள் தன்னை மாற்ற விரும் பவில்லை' என்று லியோ என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். அருங் குறிகளும் அருளடையாளமும் வேண்டி நிற்கும் சமுதாயமே மீண்டும் வளர்ந்து கொண்டு வரு கின்றது. பிறரன்பு, உயிர்களை மதிக்கும் நிலைகள் அருகிக் காணப் படுகின்றன. வன்முறைகளைத் தூண்டிவிடும் திரைப்படங்களும், போதைப் பொருள் பாவனையும் இளைஞர்கள் மத்தியில் பரப்பப்படு வதால் அவர்களிடம் வன்முறை யான நிலைப்பாடுகளே தோற்றம் பெற்று வருகின்றது.

அமல அருள்தாசன்

எனவே இளையோரின் வாழ் வில் மாற்றங்கள் ஏற்படவும் அவர் களை நல்வழிப்படுத்தவும் உரிய முறைகளைக் கையாண்டு அவர் களை இறை உறவில் வளர வழி காட்டுவதுடன் இத் தவக் காலத்தில் விசேடமாக இறைவனிடம் வேண்டு வோம்.

## இரு கன்றுகளை ஈன்ற பசு

(துன்னாலை)

பசுவொன்று 2 கன்றுக்குட்டி களை ஒரே நேரத்தில் ஈன்றுள்ள அதிசய சம்பவம் வடமராட்சி துன் னாலை கலிகைச் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கலிகைச் சந்தியில் உள்ள க. புஸ்பராசா என்பவரின் வீட்டில் வளர்க்கப்படும் பசுவே ஒரே நேரத் தில் இரு கன்றுகளை ஈன்றுள்ளது. தற்போது இரு கன்றுகளும் தாயும் நலமாக உள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (க-101)

## காசநோய் வாரம்

எதிர்வரும் 24ஆம் திகதி முதல் காசநோய் வாரம் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

இந்த வார நாட்களில் யாழ். மார்புநோய் சிகிச்சை நிலையத்தி னூடாக விழிப்புணர்வுக் கருத்தரங் குகள் இடம்பெறவுள்ளன. (க-9)

## வர்த்தகர்கள் மீதான தாக்குதலுக்கு வர்த்தக நலன்புரிச் சங்கம் கண்டனம்

(வவுனியா)

வவுனியா நகர வர்த்தக சமூகத் தினரை இலக்கு வைத்து நடாத் தப்படும் குண்டுத் தாக்குதலை வவுனியா மாவட்ட வர்த்தக நலன் புரிச்சங்கம் வன்மையாகக் கண்டித் துள்ளது. கடந்த வியாழக்கிழமை வவுனியா வர்த்தக சமூகத்தைச் சேர்ந்த மூவரினது வீட்டின் மீது இனந்தெரியாத குழுவினர் தாக்கு தலை நடாத்தியுள்ளனர்.

இத் தாக்குதலின் போது பாரிய சேதங்கள் ஏற்படாத போதிலும் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச் சாத் தான நிலையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது குறித்து வர்த்தக சமூகம் கவலை அடைவ தாக சங்கம் விடுத்துள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தாக்குதல்களை மேற் கொள்பவர்கள் இதனை உடனடி யாக நிறுத்தவேண்டும் என்று கோரு வதோடு இதுகுறித்து கண்காணிப் புக் குழுவுக்கு அறிவித்துள்ளதாக வும் வவுனியா மாவட்ட வர்த்தக நலன்புரிச்சங்கம் தெரிவித்துள்ளது.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியது பொலிஸா ரின் கடமை என்றும் அந்த அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-9)

## 18 ஆயிரம் பட்டதாரிகளுக்கு 3 மாதம் விசேட பயிற்சி

(திருகோணமலை)

அரச பாடசாலைகளில் நியம னம் பெற்றுள்ள 18 ஆயிரம் பட்ட தாரி ஆசிரியர்களுக்கு கற்பித்தல் துறையில் மூன்று மாதங்களுக் கான விசேட பயிற்சி வழங்கப்பட வுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள் ளார்.

இதன்படி பேராதனை, கொ ழும்பு, யாழ்ப்பாணம், கிழக்கு மற்றும் தென் கிழக்கு பல்கலைக் கழகங்களில் ஒவ்வொரு தவணைக் கும் தலா 500 பட்டதாரிகள் பயிற் சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட வுள்ளனர்.

இந்தப் பயிற்சியின் பின்னர் இவர்கள் மாகாண பாடசாலைக ளுக்கு நியமிக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

## இராசி பலன்

**19.03.2006**
**(பங்குனி 5, ஞாயிற்றுக்கிழமை)**
**சதுர்த்தி முற்பகல் 10.35 மணிவரை**
**விசாகம் முழுவதும்**
**இராகுகாலம் 4.48-6.18 மணிவரை**
**சுபநேரம் 9.18-10.48 மணிவரை**
**3வது தவக்கால ஞாயிறு**

| | |
|---|---|
| மேடம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய தாமதம், போசனசுகம், களஸ்திர நன்மை. |
| இடபம் | ஆரோக்கியம், முயற்சி கைகூடும், போசன சுகம், சுபநிகழ்வு. |
| மிதுனம் | புததிரரால் கவலை, முயற்சி தாமதம், தர்மம், புதிய திருப்பம். |
| கடகம் | புதிய தகவல், காரியதாமதம், தெய்வ சிந்தை, பிரயாணம். |
| சிங்கம் | பிரயாணம், நல்லமுயற்சி, சுபநிகழ்வு, விருந்துபசாரம். |
| கன்னி | வீண்பகை, பணவிரயம், காரியதாமதம், ரோகநிலை. |
| துலாம் | கற்பனை மிகுதி, பெரியோரால் நன்மை, நல்ல முயற்சி, தொழில் சிந்தை. |
| விருச்சிகம் | பிரயாணம், சுபசெலவு, அமைதிக் குறைவு, காரியதாமதம். |
| தனுசு | காரிய நன்மை, பெருமையடைதல், மாதா நட்பு, போசனசுகம். |
| மகரம் | அதிகாரம், நல்லமுயற்சி, உற்சாகம், நண்பர்கள உதவி. |
| கும்பம் | புதிய திட்டமிடல், பிரயாணம், தந்தை வழி உறவு, முயற்சி தாமதம். |
| மீனம் | அபகீர்த்த, வாகனபயம், காரியதடங்கல், ரோகநிலை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

## மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

உலக கனேடிய சேவை நிறுவனத்தினால் நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் களுக்கு இலவசமாக மோட்டார் சைக்கிள் திருத்துவது குறித்து பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இப் பயிற்சி நெறி 6மாத காலத்தை கொண்டது முதலில் இருபது பேருக்கு பயிற்சிக்கு வழங்கப் பட வுள்ளது.

ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறி யின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் சுய தொழிலுக்கான கடனுதவி அல்லது திருத்துவதற் கான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (க-132,133)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கரணவாய் வடமேற்கு நவிண்டில் கலைமதி சன சமூக நிலையம் அண்மையில் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்துள்ளது.

இதற்கமைய தலைவராக கி.யோகேந்திரனும், செயலாளராக கு.சத்தியசீலனும், பொருளாளராக சி.நளேந்திரனும், உபதலைவராக து.பிரதீபனும், உபசெயலாளராக சி.சிவராசாவும் , விளையாட்டுத் தலைவராக க.கிருஸ்ணானந்தனும், பாலர் பாடசாலை தலைவராக இ.நாகேந்திரராஜாவும், கணக்கு பரிசோத கராக ச.சிவயோகராசாவும், போசகராக வே.சிவலிங் கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக க.லிங்கமூர்த்தி, சி.சிவராசா, வ.இளங்கோ, மு.சின்னராசா, அ.தன பாலசிங்கம், ஆ.சிவகுமார், கி.பன்னீர்ச்செல்வம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (கு)

## தொழிற்பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவில் வடக்கு-கிழக்கு மாகாண கைத்தொழில் திணைக்களத்தினால் தொழிற் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக யாழ். பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

ஆறுமாத காலத்தை உள்ளடக்கி மின் உபகரணம் திருத்தம், கணனி வன்பொருள் பயிற்சி, மரவேலைப் பயிற்சி ஆகிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட வுள்ளது.

இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளவிரும்புவோர் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னதாக பிரதேச செயலர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் எனும் முக வரிக்கு அனுப்பிவைக் கலாம் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. (க-9)

## அரச ஊழியர்களுக்கிடையில் ஆக்கத்திறன் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அரச ஊழியர்களுக்கிடை யிலான ஆக்கத்திறன் போட் டிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சிங்களம் மற்றும் தமிழ்மொழி களில் நடத்தப்படும் இந்தப் போட்டி யில் அரச நிறுவனங்களிலும், ஏனைய நிறுவனங்களிலும் இணைக் கப்பட்டுள்ள உழியர்களது இலக் கியம் சார்ந்த திறமைகளையும், ஆக்கத்திறனையும் ஊக்குவிக் கும் வகையிலும் வெளிக் கொண ரும் வகையிலும் இந்த ஆக்கத் திறன் போட்டி நடைபெறவுள்ளது.

சிறுகதைகள், சிறுகதைகளின் மொழிபெயர்ப்புகள், பாடல்கள், கவிதைகள் , சிறுவர் கதைகள் போன்ற முறைகளில் இந்தப் போட் டிகள் நடத்தப்படவுள்ளன.

இப் போட்டிகளில் பங்குபற்று பவர்கள் பதிவுகளை மேற்கொள் ளும் இறுதித் தினம் அடுத்த மாதம் 30ஆம் திகதியாகும்.

இது தொடர்பான தகவல்களை பணிபுரியும் நிறுவனங்களில் பெற் றுக்கொள்ளமுடியும். (த-9)

## பண்ணை மினிபஸ் தரிப்புநிலையத்தில் சிற்றூர்திகளை நிறுத்த நடவடிக்கை

### மாநகர ஆணையாளர் தனியார் சிற்றூர்திச் சங்கத்துக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

முனீஸ்வரன் வீதியிலுள்ள நடைபாதை வியாபாரிகள் அவரவர் களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக் குச் சென்று வியாபார நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டுமென யாழ்.மாநகரசபையால் விதிக்கப் பட்ட காலக்கெடு இம்மாதம் 23 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இதற்கமைய அத் திகதியிலி ருந்து தனியார் சிற்றூர்திகளும் பண்ணை மினிபஸ் தரிப்பு நிலை யத்துக்கு காங்கேசன்துறைவீதி வழியாகச் சென்று தரித்துநின்று, முனீஸ்வரன் வீதியூடாக பஸ் நிலை யத்தையடைந்துபயணிகளை ஏற்றிச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் யாழ்.தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத் தலைவருக்கெழுதிய கடித மூலம் கேட்டுக்கொண்டுள்ளார். (கு)

## சட்டவிரோதமான முறையில் விற்பனைக்காக இருந்த மாட்டிறைச்சி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகரிலுள்ள மாட்டிறைச் சிக் கடைகளை கடந்த 9ஆம் திகதி திடீர் பரிசோதனை செய்த சுகா தாரப் பரிசோதகர்கள் சட்டவிரோ தமான முறையல் விற்பனைக்கு வைத்திருந்த 8½ கிலோ கிராம் இறைச்சியை முற்றாக அழித்ததா கத் தெரிவிக்கப்படுகிறது.


(க-132,133)

# ஈராக்கில் 2வது நாளாக தொடரும் தாக்குதல்கள்

## தீவிரவாத அமைப்பின் தலைவன் உட்பட 48 பேர் சிக்கினர்

(பாக்தாத்)

அல்-குவைதாவின் ஆதரவு இயக்கமான அபுமுசாப் அல்-ஜர்காவி அமைப்பு தீவிரவாதிகள் மீது அமெரிக்க மற்றும்



ஈராக் கூட்டுப் படைகள் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் தொடர் தாக்குதலில் ஈடுபட்டன. இதுவரை முக்கிய தளபதி உட்பட 48 தீவிரவாதிகள் பிடிபட்டுள்ளனர்.

ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சியை நீக்கிய பின்னர் அமெரிக்க இராணுவ பாதுகாப்புடன் புதிய தேர்தல் நடந்தது. அதன்படி புதிதாக அமைந்துள்ள பாராளுமன்றத்தின் முதல் கூட்டம் கடந்த வியாழக்கிழமை பாக்தாத்தில் கூடிய சமயத்தில் வடகிழக்கு பாக்தாத்தில்



உள்ள சமரா பகுதியில் அல் குவைதா ஈராக் பிரிவான அபு முசாப் அல் ஜர்காவி அமைப்பைச் சேர்ந்த 200 தீவிரவாதிகள் கொரில்லாத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதனால் சமராவை சுற்றி உள்ள நான்கு கிராமங்களில் மறைந்து இருந்த அல்குவைதா தீவிரவாதிகள் மீது வியாழக்கிழமை முதல் தாக்குதல் தொடங்கியது. இதில் அமெரிக்க மற்றும் ஈராக் கூட்டுப் படையின் 1500 வீரர்கள், 50 போர் விமானங்கள், 200 இராணுவ வாகனங்கள் ஈடுபட்டன.

'ஆபரேசன் ஸ்வார்மர்' என்ற பெயரில் நடக்கும் இந்தத் தாக்குதலில் 60ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஈராக் இராணுவத்துக்கு எதிரான சக்திகளை அழிப்பதே தாக்குதலின் நோக்கமாகும்.

தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்று முன்தினமும் நடந்த தாக்குதலில் 48 தீவிரவாதிகள் பிடிபட்டனர். ஏராளமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. தீவிரவாதிகள் யாரும் கொல்லப்படவில்லை என்று அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

அந்த மாகாணத்தின் துணை கவர்னர் அப்துல்லா உசேன் இது தொடர்பில் கூறுகையில், பிடிபட்டவர்களில் அந்த அமைப்பின் முக்கிய தலைவனும் ஒருவன். மொத்தம் 200 பேர் கொண்ட அந்தத் தீவிரவாதக் கும்பலில் ஈராக்கியர் மற்றும் வெளிநாட்டவரும் அடங்குவர். அவர்களின் குரல்கள், பெயர்கள் மற்றும் படங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றார்.


ஈராக்கில் அமெரிக்கப்படைகள் பாது



காப்புப் பணியில் ஈடுபட்ட பிறகு நடந்த இந்த மிகப்பெரிய தாக்குதல் குறித்து ஈராக் வெளியுறவு அமைச்சர் ஹோசியர் ஜெபாரி கூறும் போது, இந்தத் தாக்குதல் மூலமாக ஈராக் இராணுவத்தினர் தீவிரவாதிகளை ஒடுக்கும் பயிற்சியைப் பெறமுடிந்தது என்றார்.

இதற்கிடையில் 275 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தில் சபாநாயகர், அதிபர், பிரதமர் மற்றும் அமைச்சர் பதவிகள் குறித்து சன்னி, குர்திஷ் மற்றும் ஷியா இனத்தவர் இடையில் எந்த ஒரு உடன்பாடும் எட்டவில்லை. (தி)

WORLD NEWS உலக தரிசனம்



சிங்கப்பூர் சென்ற இங்கிலாந்து ராணி எலிசபத்துக்கு இந்திய சிறுமி கொடுத்த சால்வையை அவர் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டார்.

# படப்பிடிப்பில் இரயில் விபத்து 6பேர் பலி; 11 பேர் படுகாயம்

(மான்டிவிடியோ)

ஆபிரிக்காவில் உள்ள உருகுவே நாட்டில் டெலிவிஷன் நிகழ்ச்சிக்கான படப்பிடிப்பு நடந்தது. புசேலஞ்ச் ஆப் தி ஹார்ட் என்பதே நிகழ்ச்சியின் தலைப்பு. இதில் இரயிலை ஆட்கள் தள்ளுவது போல் வித்தியாசமான முறையில் எடுப்பதற்கு டிவி குழு திட்டமிட்டது. மான்டிவிடியோ நகரில் இரயில்கள் நிறுத்தி வைக்கப்படும் இடத்தில் படப்பிடிப்பு நடந்தது.

இதில் 200பேர் கலந்து கொண்டு இரயிலை தள்ளி தங்களது பலத்தை நிரூபிக்க வேண்டும். இவர்கள் தவிர ஏராளமான பொதுமக்களும், 3000மாணவ-மாணவிகளும் படப்பிடிப்பை வேடிக்கை பார்த்தனர்.

அப்போது இரயிலை 200பேரும் தள்ளி வரும்போது எதிர்பாராத விதமாக இரயில் தடம்புரண்டு விபத்து ஏற்பட்டது.

இதில் பார்வையாளர்கள் 6பேர் பலியானார்கள். மேலும் 11 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் பலர் கைகால்கள் இழந்து குற்றுயிராகக் கிடந்தனர். பொலிஸார், தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். காயமடைந்தவர்களுக்கு உதவ மருத்துவக் குழுவும் சம்பவ இடத்துக்கு விரைந்தது.

இந்தத் துயர சம்பவம் காரணமாக உருகுவே நாட்டில் 3 நாட்களுக்கு துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு பள்ளிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (தி)

# ஜோர்தானில் விசா இன்றித் தங்கியிருக்கும் இந்தியர்களைத் திருப்பி அனுப்ப முடிவு

(துபாய்)

முறையான ஆவணங்கள் மற்றும் விசா இல்லாமல் தங்கள் நாட்டில் தங்கியிருக்கும் 200 இந்தியர்களை திருப்பி அனுப்ப ஜோர்தான் நாடு முடிவு செய்துள்ளது.

இந்தியாவிலிருந்து ஜோர்தானுக்கு சென்ற 42 தொழிலாளர்கள் கடந்த மாதம் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். இதனால் அவர்கள் படும் துன்பங்களைப் பற்றி ஜோர்தானிலுள்ள இந்தியத் தூதர் தயாகர் அந்நாட்டுத் தொழிலாளர் துறை அமைச்சர் பசேம் சலீமுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அமைச்சர் பசேம் சலீம் அனுமதிக்கப்படாத ஏஜென்சிகள் இந்தியாவில் ஏராளமாக உள்ளன. இதனால் சரியான விசா இல்லாமல் 200 இந்தியர்கள் ஜோர்தானுக்குள் நுழைந்துள்ளனர்.

ஜோர்தானின் அகாபா பகுதியில் இருக்கும் இந்தியர்கள் இன்றும் வேலையின்றி உள்ளனர். அதனால் அவர்களை திருப்பி அனுப்ப நாங்கள் ஏற்பாடு செய்து வருகிறோம் என்றார். (தி)

# ஜமைக்கா நாட்டின் முதல்பெண் பிரதமர் 30இல் பதவியேற்பார்

(கிங்ஸ்டன்)

ஆபிரிக்காவில் உள்ள ஜமைக்கா நாட்டின் முதல் பெண் பிரதமராக போர்ஷியா சிம்சன் மில்லர் பதவி ஏற்க இருக்கிறார். 60 வயதான அவர் 1989ஆம் ஆண்டு முதல் மந்திரியாக இருந்து வருகிறார். ஆளும் மக்கள் தேசியக் கட்சியின் தலைவராக இருக்கும் பிரதமர் பாட்டர்சனுக்குப் பதில் புதிய தலைவராக கடந்த மாதம் நடந்த தேர்தலில் இவர் தேர்ந்து எடுக்கப்பட்டார்.

எதிர்வரும் 30ஆம் திகதி பாட்டர்சன் பதவியை இராஜினாமா செய்கிறார். அன்றைய தினமே புதிய பிரதமராக போர்ஷியா பதவி ஏற்கிறார். (க)



கடந்த 11ஆம் திகதி ஐ.நா., கட்டுப்பாட்டு சிறையில் மாரடைப்பால் மரணமடைந்த யுகோஸ்லேவியாவின் முன்னாள் அதிபர் மிலோசெவிக் கொசாவோவின் உடல் பெல்கிரேடில் உள்ள மியூசியம் ஒன்றில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அஞ்சலி செலுத்த வந்த ஒருவர் அதிபரின் புகைப்படத்திற்கு முத்தமிடுகிறார்.

# வெடிபொருட்களை கண்டுபிடிக்காத அமெ.விமான நிலைய கருவிகள்!

(வோஷிங்டன்)

வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படும் பொருட்களை சோதனை முறையில் அனுப்பி வைத்தபோது அமெரிக்காவின் 21 விமான நிலையங்களில் உள்ள எந்த சோதனைக் கருவியும் அவற்றைக் கண்டுபிடிக்கவில்லை என்று அமெரிக்க பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகையில் தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒருவன் வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படும் சில பொருட்களை விமானம் மூலம் கொண்டு சென்றால் அதனைக் கண்டுபிடிப்பதில் விமான நிலையங்களின் திறனைக் கண்டறிய வேண்டும் என்று அமெரிக்க பாராளுமன்றம் உத்தரவிட்டது. இதன்படி, கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து ஜனவரி மாதம் வரை அமெரிக்காவின் 21 விமான நிலையங்கள் மூலம் வெடிகுண்டுகள் தயாரிக்கப் பயன்படும் பொருட்கள் சோதனை முறையில் அனுப்பிவைக்கப்பட்டன. இவற்றை விமான நிலையங்களில் இருந்த எந்த ஒரு கருவியும் கண்டுபிடிக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக விமான நிலையங்களின் பெயர்களை அப்பத்திரிகை வெளியிடவில்லை.

அமெரிக்காவின் போக்குவரத்துப் பாதுகாப்பு நிர்வாக அமைப்பு இதைப் பற்றி எந்தக் கருத்தும் கூறவில்லை. இருப்பினும் சக்திவாய்ந்த வெடிபொருட்களை சோதனைச் சாவடியில் கண்டுபிடிப்பதே எங்களின் முக்கிய பணி. இதற்காக உயர்தொழில்நுட்பம் குறித்த பயிற்சிகள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று கூறியுள்ளது. (தி)

# முஸ்லிம்களிடையே மோதல் 22பேர் பலி; 7பேர் காயம்

(டெக்ரான்)

ஈரான் நாட்டில் ஷியா முஸ்லிம்கள் தான் பெருமளவில் வசிக்கிறார்கள். சன்னி முஸ்லிம்கள் அங்கு சிறுபான்மையினர் தான். ஈரானிலும் சன்னி, ஷியா முஸ்லிம்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது.

ஆப்கானிஸ்தான் எல்லையோரத்தில் உள்ள மாநிலத்தில் சகெடான் நகரில் இரவு நேரத்தில் ஆயுதம் தாங்கிய சிலர் சன்னி முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதில் 22 சன்னி முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். 7பேர் காயமடைந்தனர். தாக்குதல் நடத்தியவர்கள் ஆப்கானிஸ்தானுக்கு தப்பி ஓடிவிட்டனர். (தி)

21

# கூடிய — தனிநபர் ஓட்டம்



முன்னொரு காலத்தில்...
(சனத் ஜெயசூர்யா)

போட்டி ஒன்றில் பங்கு பற்றி கூடிய ஓட்டங்களைப் பெற்றவர்களைப் பார்க்கையில் முதல் இடத்தில் இருப்பவர் பாகிஸ்தான் அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சஹிட் அன்வர்.

இந்திய அணிக்கெதிராக 194 ஓட்டங்களைப்பெற்று இச்சாதனையைப் படைத்தார்.

பெப்சி கிண்ணத்துக்கான சென்னையில் 1997ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி 6ஆவது போட்டியாக இப்போட்டி இடம்பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி அன்வரின் சிறப்பான துடுப்பாட்டம் காரணமாக 50 ஓவர் நிறைவில் 5 விக்கெற்றினை இழந்து 327 ஓட்டங்களைப் பெற்றது.

இவ்வணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய சஹீட் அன்பர் 206 நிமிடங்கள் களத்தில் நின்று 194 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் சச்சின் டெண்டுல்கர் வீசிய பந்தை கங்குலியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்போது அன்பர் 146 பந்துகளை எதிர்கொண்டு 22 நான்கு ஓட்டங்கள் 5 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக இந்த 194 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன் மூலம் 1984ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கெதிராக மேற்கிந்திய வீரர் விவிலியன் றிச்சட்ஸின் ஆட்டமிழக்காமல் பெற்ற 189 ஓட்டங்களை 13 வருடங்களின் பின்னர் முறியடித்து புதிய சாதனை படைத்தார்.


இப்போட்டியில் பாகிஸ்தான் அணி 35 ஓட்டங்களால் வெற்றி பெற்றதோடு போட்டியின் ஆட்ட நாயகனாக அன்வர் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வரிசையில் இரண்டாம் நிலையில் இருப்பவர் மேற்கிந்திய அணியின் விவிலியன் றிச்சட்ஸன்.

இங்கிலாந்து அணிக்கெதிராக 31.05.1984ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 55 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெற்றினை இழந்து 272ஓட்டங்களைப் பெற்றது.



அனைவரும் பாருங்கள்
(சஹிட் அன்வர்)



ஆயிரத்தில் ஒருவன்
(சச்சின் டெண்டுல்கர்)

நான்காம் நிலை வீரராகக் களமிறங்கிய றிச்சட்ஸின் ஆட்டமிழக்காமல் 189 ஓட்டங்களைப் பெற்றார்.

170 பந்துகளை எதிர்கொண்டு 21 நான்கு ஓட்டங்கள் 5 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 189 ஓட்டங்களைப் பெற்றார்.

104 ஓட்டங்களால் மேற்கிந்திய அணி வெற்றி பெற போட்டடியின் ஆட்ட நாயனாக றிச்சட்ஸன் தெரிவு செய்யப்பட்டார்.

றிச்சட்ஸன் அடுத்ததாக இருப்பவர் இலங்கையணியின் முன்னாள் அணித் தலைவரும் நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான சனத் ஜெயசூர்யா.

இந்திய அணிக்கெதிராக 29.10. 2000 ஆம் ஆண்டு கொக்ககோலா கிண்ணத்துக்காக சார்ஜாவில் இரவு - பகலாக நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்ச்சியில் வெற்றி பெற்ற அப்போது இலங்கையணிக்குத் தலைவராக இருந்த ஜெயசூர்யா இந்திய அணியைக் களத்தடுப்பில் ஈடுபடுமாறு பணித்தார்.

## நோயல்

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி ஒரு கட்டத்தில் 116 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றினை இழந்து தள்ளாடிக் கொண்டிருந்தது. இவ்வாறு தள்ளாடிக் கொண்டிருந்த அணியை களத்தில் நின்றிருந்த (ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கி) ஜெயசூர்யா அர்னோல்ட்டுடன் இணைந்து அணியினை மீட்டார்.

இதற்காக 161 பந்துகளை எதிர்கொண்ட ஜெயசூர்யா 21 நான்கு ஓட்டங்கள் 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 189 ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டியில் ஜெயசூர்யாவின் துணையுடன் இலங்கையணி 299 ஓட்டங்களைப் பெற்றது.

இருந்தும் இலங்கையணியின் துல்லியமான பந்து வீச்சினால் இந்திய அணியால் 54 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

245 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்ற இலங்கையணிக்கு ஆணிவேராக இருந்த ஜெயசூர்யா ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வரிசையில் ஜெயசூர்யாவை தொடர்ந்து தென்னாபிரிக்க வீரர்

(4) ஹரிகிஸ்டன் (தென்.ஆபி) ஐக் கிய அரசு இராஜ்ஜியத்திற்கு எதிராக 1995/96ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டியில் ஆட்டமிழக்காமல் 188 ஓட்டங்களைப் பெற்றார்.

(5)சச்சின் டெண்டுல்கர் (இந்) நியூஸிலாந்து அணிக்கெதிராக 1999/00 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆட்டமிழக்காமல் 186 ஓட்டங்களைப் பெற்றார்.

(6)மகேந்திரா டோனி (இந்) எதிர் இல - 183

(7)சௌரவ் கங்குலி (இந்) எதிர் இல-183

(8)விவிலியன் றிச்சர்ட்ஸன் (மேற்இந்) எதிர் இல 181

(9)கபில் தேவ் (இந்) எதிர் சிம் 175

(10)ஹேர்ஸல் கிப்ஸ் (தென்ஆபி) எதிர் அவுஸ் 175.

(அடுத்தவாரம் தொடரும்...)

### அதிகூடிய (மொத்த) ஓட்டம்

| | | போட்டி | இனிங்ஸ் | ஓட்டம் | அதி.கூடிய ஓட்டம் | சராசரி | துடுப்பாட்ட வேகவிகிதம் | 100 | 50 | பிடிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சச்சின்டெண்டுல்தர் | (இந்) | 362 | 353 | 14146 | 186 | 44.20 | 85.98 | 39 | 72 | 107 |
| இன்சமாம்உல்ஹக் | (பாக்) | 356 | 331 | 11251 | 137 | 39.89 | 74.51 | 10 | 82 | 104 |
| சனத் ஜெயசூர்யா | (இல) | 357 | 348 | 10625 | 189 | 31.90 | 88.86 | 19 | 60 | 107 |
| சௌரவ் கங்குலி | (இந்) | 279 | 270 | 10123 | 183 | 40.65 | 73.79 | 22 | 60 | 96 |
| முஹமட் அசாருதின் | (இந்) | 334 | 308 | 9378 | 153 | 36.92 | 73.99 | 7 | 58 | 156 |
| பிறைன்லாரா | (மேற் இந்) | 259 | 252 | 9359 | 169 | 41.41 | 79.46 | 19 | 57 | 109 |
| அரவிந்த டி சில்வா | (இல) | 308 | 296 | 9284 | 145 | 34.90 | 81.13 | 11 | 64 | 95 |
| றிக்கி பொண்டிங் | (அவுஸ்) | 250 | 244 | 9191 | 164 | 42.74 | 79.34 | 20 | 52 | 104 |
| ராகுல் ராவிட் | (இந்) | 280 | 259 | 9048 | 153 | 40.21 | 70.27 | 11 | 68 | 167 |
| சஹீட் அன்வர் | (பாக்) | 247 | 244 | 8823 | 194 | 39.21 | 80.66 | 20 | 43 | 42 |

### வருடத்தில் 1400 ஓட்டம்

| | | ஆண்டு | போட்டி | இனிங்ஸ் | ஓட்டம் | அதிகூடியஓட்டம் | சராசரி | 100 |
|---|---|---|---|---|---|---|---|---|
| சச்சின்டெண்டுல்கர் | (இந்) | 1998 | 34 | 33 | 1894 | 143 | 65.31 | 9 |
| சௌரவ் கங்குலி | (இந்) | 1999 | 41 | 41 | 1767 | 183 | 46.50 | 4 |
| ராகுல் ராவிட் | (இந்) | 1999 | 43 | 43 | 1761 | 153 | 46.34 | 6 |
| சச்சின்டெண்டுல்கர் | (இந்) | 1996 | 32 | 32 | 1611 | 137 | 53.70 | 6 |
| சஹீட் அன்வர் | (பாக்) | 1996 | 36 | 36 | 1595 | 115 | 51.45 | 3 |
| சௌரவ் கங்குலி | (இந்) | 2000 | 32 | 32 | 1579 | 144 | 56.39 | 7 |
| மார்க் வோ | (அவுஸ்) | 1999 | 36 | 36 | 1468 | 106 | 44.48 | 2 |
| ஹரி கிஸ்டன் | (தென்ஆபி) | 2000 | 36 | 36 | 1467 | 115 | 44.45 | 2 |
| ஹரி கிஸ்டன் | (தென்ஆபி) | 1996 | 29 | 39 | 1442 | 188 | 57.68 | 6 |

### சிறந்த துடுப்பாட்ட சராசரி

| | | போட்டி | இனிங்ஸ் | ஓட்டம் | அதி.கூடியஓட்டம் | சராசரி | 100 | 50 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மைக்கூஷே | (அவுஸ்) | 37 | 29 | 1102 | 88 | 78.71 | - | 9 |
| மகேந்திரா டோனி | (இந்) | 35 | 31 | 1133 | 183 | 53.95 | 2 | 6 |
| மைக்கல் பெவன் | (அவுஸ்) | 232 | 196 | 6912 | 108 | 53.58 | 6 | 46 |
| சஹீர் அப்பாஸ் | (பாக்) | 62 | 60 | 2572 | 123 | 47.62 | 7 | 13 |
| விவிலியன்றிச்சர்ட்ஸ் | (மேற்.இந்) | 187 | 167 | 6721 | 189 | 47.00 | 11 | 45 |
| ஜி.ரேர்னர் | (நியூ) | 41 | 40 | 1598 | 171 | 47.00 | 3 | 9 |
| சி.கிறீனிட்ஜ் | (மேற்.இந்) | 128 | 127 | 5134 | 133 | 45.03 | 11 | 31 |
| மைக்கல் கிளார்க் | (அவுஸ்) | 79 | 71 | 2323 | 105 | 44.67 | 2 | 16 |

# அரசு – புலிகள் பேச்சுக்கு அவசியமானது அர்ப்பணிப்பே

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டுமென பல தரப்புகளிலிருந்தும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டே வருகிறது. பெரும்பாலான அமைப்புகளும் புத்திஜீவிகளும் இருதரப்பும் கூடிப் பேசவேண்டியதன் அவசியத்தை தொடர்ந்தும் வலியுறுத்தியே வருகிறார்கள். ஆனால் பேச்சுக்களின் போது இருதரப்பும் செயற்பட வேண்டிய விதம் குறித்து பெரிதாக அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

கடந்த கால இனமுரண்பாட்டு வரலாற்றைப் பார்த்தால் கூட அரசாங்கத்திற்கும் தமிழ்த்தரப்புக்குமான பேச்சு என்பது வெறும் பேச்சாகவே முடிந்திருப்பதற்கான காரணம், பேச்சின் போது உண்மையான அர்ப்பணிப்புத் தன்மை காணப்படாமையே. ஒரு தரப்பு மற்றத்தரப்பின் அபிலாஷைகளை, தேவைகளை புரிந்துகொள்ள முயற்சிக்காமல் தமது தீர்மானத்தை திணிக்க முற்படுவதே இதன் உள்ளர்த்தமாக இருக்கிறது.

– ஜீ.யோகப்பிரியா

விசேடமாக அரசாங்கமானது தொடர்ந்தும் தமிழ்த்தரப்பின் கோரிக்கைகளை புறந்தள்ளி தனக்கு வசதியான தீர்வினை திணிக்கின்ற கைங்கரியத்தையே முயன்று பார்க்கின்றது. தனிநாடு கோருகின்ற தரப்புக்கு மாவட்ட சபைகளை, மாகாண சபைகளை கொடுத்து அதிலும் பின்னர் அதிகாரங்களை வெட்டிக்குறைக்க எத்தனித்த வரலாறு சகலருக்கும் தெரிந்த ஒன்று.

எனவே, இனிமேலாவது இம்மாதிரியான திருகுதாளங்களை கைவிட்டு நடக்கக்கூடிய விடயத்தைப்பற்றி பேச வேண்டியதே அவசியமாகும்.

தொடர்ந்தும் மக்களை எதிர்பார்க்க வைத்து பின்னர் ஏமாற்றுகின்ற செயலைக் கைவிட்டு உண்மையான அர்ப்பணிப்போடு நேர்மையாக தீர்வு காண முயற்சித்தால் முடியாதது ஏதுமில்லை.

ஆகவே, இனிவரும் பேச்சுக்களிலாவது ஆளை ஆள் ஏமாற்றாமல் உண்மையாக உள்ளதைப்பேசி உருப்படியான தீர்வுக்கு வர முயற்சிக்க வேண்டும்.

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை – 21 இன் தொடர்ச்சி

3. மக்களின் விருப்பே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ்விருப்பானது, காலாகாலம் நடைபெறும் மெய்யான தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இத்தேர்தல் பொதுவானதும், சமமானதுமான வாக்களிப்புரிமை மூலமே இருத்தல் வேண்டும் என்பதுடன், இரகசிய வாக்குமூலம் அல்லது அதற்குச் சமமான, சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகள் மூலம் நடைபெறுதல் வேண்டும்.

## கருத்தாடல் களம்

### உள்ளூராட்சி தேர்தல் அவசியமில்லை

தற்போதைய சூழலில் உள்ளூராட்சி தேர்தல் அவசியமற்றதொன்றாகும். தமிழ் பேசும் மக்களுக்கு இந்த தேர்தல்களால் இதுவரை எவ்வித பலனும் ஏற்படவில்லை. எவ்வித அபிவிருத்தியும் இந்த சபைகளால் தமிழ் பேசும் மக்கள் அடையவில்லை. இவ்வாறான தேர்தல்களை பாவித்து மத்திய அரசாங்கத்தின் ஆட்சி வடகிழக்கில் இருக்கிறது என்பதை காட்டுவதே ஆட்சியாளர்களது நோக்கமாகும். எனவே, இந்த கபட நோக்கத்திற்கு இடமளிக்காது நிரந்தர சமாதானத்திற்கு தீர்வு ஒன்றை தந்துவிட்டு அல்லது திருத்தப்பட்ட தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக்கொண்ட ஒரு அரசியல் யாப்பினை தந்துவிட்டு அதன் பின்னர் தேர்தல் நடத்தட்டும் நாங்கள் வாக்களிக்கிறோம்.

பா. கிருபாகரன் பொத்துவில்

### முஸ்லிம்களுக்கிடையில் இணக்கப்பாடு அவசியம்

ஜெனீவாவின் முதற்கட்டப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு கிடைக்கப் பெறாமைக்கு முற்றிலும் முஸ்லிம் தலைவர்கள் தான் காரணம். அரசுடன் இணைந்திருக்கும் முஸ்லிம் தலைவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கு நேரான வேண்டுகோளை விடுத்திருக்க வேண்டும். முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு கிடைக்கப்பெறத் தவறும் பட்சத்தில் அரசை விட்டு வெளியேற தயாராகவுள்ளோம் என்ற பகிரங்க அறிக்கை விடுத்திருக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் அறிவித்திருந்தாலும் அவை பெயரளவிலேயே இடம்பெற்றன. அவர்கள் பதவிக்கு ஆசைப்பட்டவர்களாக அரசுடன் தலையாட்டி பொம்மைகளாக ஒட்டிக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் ஒருமித்த குரலுடையவர்களாக, அரசுக்கு வெளியில் உள்ள முஸ்லிம் தலைவர்களும் வேற்றுமை பாராது, முஸ்லிம்கள் அனைவரும் ஒரே கொடியின் கீழ் ஒன்றுபடுவதன் இனிமேலாவது இந்த தவறை விடாமல் வடகிழக்கு முஸ்லிம்களின் விடிவெள்ளிக்காக பகைமைகளை மறந்தவர்களாக செயற்படுங்கள்.

ஏ. ஆர். ஜன்னத்துல் பிர்தௌஸ்,
காயர்வீதி,
ஏறாவூர்.

## மேல் கொத்மலை திட்டம்
# ஏமாற்றப்பட்ட மக்களும் மாற்றிய அரசியல்வாதிகளும்



எதிர்பார்த்தபடியே மலையகத்தின் இருபெரும் தொழிற்சங்க அரசியல்வாதிகளும் ஒன்று சேர்ந்து மலையக தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளனர். மேல் கொத்மலை திட்டத்திற்கு ஒரு கட்டத்தில் இ.தொ.கா. எதிர்ப்பு தெரிவித்தது. அப்போது ஆட்சியில் பங்கெடுத்த மலையக மக்கள் முன்னணி ஆதரவு தெரிவித்தது.

இந்த திட்டத்தினால் அப்பிரதேச மக்களது இருப்பு கேள்விக்குரியதாகிவிடும் என இ.தொ.கா தனது எதிர்ப்புக்கு காரணம் காட்டியது.

அப்படி நடக்காது, அன்று பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்படுமென மலையக மக்கள் முன்னணி கூறியது.

பின்னர் இதே நிலை தலைகீழாக மாறி இ.தொ.கா சொன்னதை மலையக மக்கள்

– என். ஜீவேந்திரன்

முன்னணியும், மலையக மக்கள் முன்னணி சொன்னதை இ.தொ.கவும் கூறிய அபத்தம் நடந்தேறியது.

இப்போது இரு கட்சிகளுமே வெட்கமற்று ஏறத்தாழ அரசாங்கத்துடன் இணைந்துவிட்ட நிலையில் மேல் கொத்தமலை திட்டம் குறித்து மௌனமாக உள்ளன.

மலையக அரசியல் வரலாற்றில் பல்வேறு காட்டிக்கொடுப்புகள் இடம்பெற்றுள்ளன. ஆனால், இருவரும் இணைந்து மிகச் சிறப்பாக இம்முறை கருமமாற்றியுள்ளனர். இரத்தம் வடியும் மலையக தொழிலாளர்களின் இதயத்தில் நன்றாக வேலைச் செருகியுள்ளனர். வாழ்க மலையக தொழிற்சங்க அரசியல். வளர்க அதன் மக்கள் பணி.

# வேட்டுகளுக்கு இடையே

பெண்கள் யுத்தம் காரணமாகவும் வன்முறைகள் காரணமாகவும் எதிர்கொண்ட பிரச்சனைகள் தொடர்பில் ஆராய்கின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மிகக்குறைவாகவே உள்ளன எனக்கூற முடியும். அந்தவகையில் இந்தக்குறையை நீக்கு முகமாக கடந்த கால மற்றும் நிகழ்கால முரண்பாடுகளுக்கும், வன்முறைகளுக்கும் மத்தியில் வாழ்ந்த பெண்களின் அனுபவங்களையும், கருத்துக்களையும் யங் ஏஷியா இழந்தவர்களாகவும், பாலியல் துன்புறுத்தல்களுக்கும், அடிப்படை உரிமைப்பறிப்புக்கும் உட்பட்டவர்களாகவும் பெண்களே காணப்படுகின்றனர். அந்த வகையில் 11 அங்கங்களை கொண்ட இத்தொடரில் நெருக்கடியான சூழலில் பெண்களின் பங்களிப்பு குறித்தும் கடந்த கால இன முரண்பாடுகளிலும், சமாதானத்தை கட்டியெழுப்புவதிலும் பெண்களின் பங்களிப்பு குறித்தும் ஆராயப்படுகிறது.

## இலங்கையில் யுத்தம் மற்றும் சமாதானத்தில் பெண்களின் பலதரப்பட்ட அனுபவங்களை ஆராய்ந்து பார்க்கும் தொலைக்காட்சித்தொடர்



டெலிவிஷனின் தொலைக்காட்சி தொடரான கூவேட்டுகளுக்கு இடையே நிகழ்ச்சியானது ஆழமாக ஆராய்கிறது. பாதிக்கப்பட்ட பெண்கள் குறித்த பொதுவான பார்வைக்கோணத்தில் இருந்து மாறுபட்டு அவர்களது கருத்துகளுக்கும் அவர்களது உரிமைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கின்ற முறையில் இத்தொடர் படமாக்கப்பட்டுள்ளது. அத்தோடு இவர்களது வாழ்க்கையின் மீதும், எதிர்காலத்தின் மீதும் யுத்தம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினையும் சமாதானம் குறித்த அவர்களது செயற்பாட்டினையும் இது வெளிக்கொண்டு வருகிறது.

– எஸ். கிருபாலினி

டனிஷ் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் யங் ஏஷியா டெலிவிஷன் இத்தொடரை தயாரித்து வழங்குகிறது. மேலும் இத்தொடரானது இலங்கை மக்களுக்கு இனமுரண்பாடு தொடர்பான தெளிவான விளக்கத்தை அளிப்பதாக அமைந்துள்ளது.

யுத்தத்தின் விளைவுகளை பெண்களே அதிகம் உணர்ந்துள்ளதுடன், கணவனை

இத்தொடரின் முதலாவது அங்கமான கூமுன்னோக்கிய முதலடி யுத்த விளைவினால் பெண்கள் அங்கவீனமாக்கப்பட்டதையும், பின்னர் அப்பெண்கள் எவ்வாறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது என்பதையும், அங்கவீனமான பெண்களுக்கு நாட்டில் கொடுக்கப்படும் குறைந்தளவு முன்னுரிமை குறித்தும் இத்தொடர் பேசுகின்றது. இத்தொடரானது தமிழில் மார்ச் 20ஆம் திகதி முதல் திங்கள் தோறும் ஒளிபரப்பாகவுள்ளதுடன், ஆங்கிலத்தில் மார்ச் 9ஆம் திகதி முதலும், சிங்களத்தில் மார்ச் 13ஆம் திகதி முதலும் ஒளி பரப்பாகவுள்ளது

# ஐயா எங்கள் சாதி எது? சாமி எங்கள் சமயம் எது?

உங்களுக்காக ஒரு வீட்டை கட்டுகிற போது
களிமண்ணால் பிசைந்து செங்கல் செய்கிற போது
உங்களுக்காக தானிய மூட்டைகளை சுமக்கின்ற போது
காலி வயிற்றுடன் நிலத்தை நாங்கள் உழுகிற போது
(ஐயா)
புகைக்கூண்டுகளை போல் எங்கள் குடல்கள்
ஆவியையும் நெருப்பினையும் கக்கிய போது
காச நோயில் இருமிக்கொண்டு
மலைபோல் நிலக்கரியை தோண்டி எடுத்த போது
(ஐயா)
தீய்ந்து போன ரொட்டி துண்டுகளை தின்று கொண்டு
ஈரமான நிலத்தை நாங்கள் கிளறியபோது
எரிக்கும் வெயிலில் சாமி சிலைகளை
நாங்கள் தூக்கிய போது
(ஐயா)
கோயிலுக்கு நீங்கள் பூக்களை எடுத்து செல்வதற்காக
பூக்கூடைகளை நாங்கள் பின்னிய போது
நீங்கள் ஸ்ரீராம ஜெயம் எழுதுவதற்காக
காகிதங்களை நாங்கள் செய்த போது
(ஐயா)
மிருகங்களை நாங்கள் சாகடித்து
உங்களுக்காக செருப்புகளை செய்த போது
உண்பதற்கு சிறுபருக்கை கூட இல்லாமல்
உங்களுக்காக நாங்கள் பானைகள் செய்த போது
(ஐயா)
நீங்கள் சாமியார்களாவதற்காக
உங்கள் தலைகளை நாங்கள் மொட்டையடித்தபோது
உங்கள் அழுக்கு துணிகளை
மல்லிகைப்பூ வெண்மையாக நாங்கள் துவைத்த போது
(ஐயா)
உங்கள் நீண்ட கதைகள் எல்லாம் அழுகிப்போய்க்
கொண்டிருக்கின்றன.
இன்னும் கதைகள் தேவையில்லை
உழுத்துப்போன உங்கள் தேர் இனியும் ஓடாது
அது உடைந்தே விட்டது
(ஐயா)
நீங்கள் எங்களை சாதிகளாக
சாதிகளுக்குள் கோத்திரங்களாக பிரித்தீர்கள்
ஆனால் நாங்கள் ஒருங்கிணைந்து கைகோர்த்து
நின்றுவிட்டால்...
(ஐயா)

- செரபண்டராஜு (தெலுங்கு)

## இவ்வார விழிப்பில்...

- பெண்கள் யுத்தம் சமாதானம்
- சமாதான நிகழ்வுகள்
- விடுதலையும் எதிர்பார்ப்பும்
- மல்வானை மக்களும் சகவாழ்வும்

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல் முகவரி:- villippu@yatv.net




விழிப்பு நிகழ்ச்சி **TNL** அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு **7.25** மணிக்கும், ரூபவாஹினி 'ஐ' அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு **7.30** மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- *விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.* தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net



'பச்சக்குதிரை' : பார்த்திபன் - நமீதா

## அதிரடி அஜீத்



அஜீத் இப்போது பேச்சை குறைத்து செயலில் தீவிரம் காட்டி வருகிறார். 'திருப்பதி' படத்தில் கார் ரேசிங்கில் டூப் போடாமல் நடித்துள்ளார்.

திருவிழா காட்சியில் வாயில் மண்ணெண்ணெயை வைத்துக் கொண்டு தீப்பந்தத்தின் மீது ஊதி தீப் பிழம்பை ஏற்படுத்தும் காட்சி திகிலூட்டும் வகையில் படமாக்கப்பட்டுள்ளது.

'பஞ்ச்' வசனங்கள் படம் முழுவதும் வருகின்றன. 'திருப்பதி' போனா லட்டு... இந்த திருப்பதி வந்தா ஹிட்டு' என்கிறார் டைரக்டர் பேரரசு.

## ஆங்கில படத்தில் கமல்



மலையாள பட டைரக்டர் ராஜீவ்நாத் அன்னை தெரசா வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் படமாக எடுக்க திட்டமிட்டிருக்கிறார். இதற்கு ரூ.2700 கோடி செலவாகும் என்று திட்டமிட்டுள்ளார். இவ்வளவு பணம் செலவு செய்ய இங்கு எந்த தயாரிப்பாளரும் இல்லை. எனவே அவர் அமெரிக்கா சென்று ஹாலிவுட் தயாரிப்பாளர்களை சந்திக்கத் திட்டமிட்டுள்ளார். இந்தப் படத்தில் கமலஹாசன், மோகன்லால், மிதுன் சக்கரவர்த்தி ஆகியோரை நடிக்க வைக்கவும் திட்டமிட்டுள்ளார்.

## குஷ்புவிடம் ஆலோசனை கேட்டு நடிக்கிறேன் – சுந்தர்.சி



ரஜினி, கமல் உட்பட அனைத்து முன்னணி தமிழ் கதாநாயகர்களையும் இயக்கி 25 படங்களுக்கு டைரக்டராக பணிபுரிந்தவர் சுந்தர்.சி.டைரக்டர்களாக இருந்து கதாநாயகர்கள் ஆன சேரன், எஸ்.ஜே.சூர்யா வரிசையில் இடம் பிடித்திருப்பவர் சுந்தர்.சி.

'தலைநகரம்' படத்தின் மூலம் கதாநாயகன் ஆகி இருக்கும் சுந்தர்.சி குஷ்புவின் கணவர் என்பதால் தமிழக ரசிகர்கள் அனைவரிடமும் இவர் நடிக்கும் படத்துக்கு அதிக எதிர்பார்ப்பு உள்ளது. இது குறித்து சுந்தர்.சி யிடம் கேட்ட போது....

'கிரி' படம் ரிலீஸ் ஆன போது பட விநியோகஸ்தர்கள் என்னிடம் நீங்கள் நடித்தால் என்ன? என்று கேட்டார்கள். அதற்குப் பிறகு தான் நடிக்கும் ஆசை வந்தது. இதுபற்றி என் மனைவி குஷ்புவிடம் தெரிவித்தேன். அவரும் தாராளமாக நடிக்கலாம்... என்று பச்சைக்கொடி காட்டினார்.

இதற்காக எனது எடையில் 17 கிலோ குறைத்தேன். இயக்கும் படத்தின் அனைத்து பொறுப்புகளும் டைரக்டரைத்தான் சாரும். எனவே டென்ஷன் அதிகமாக இருக்கும். கடந்த வருடம் நான் இயக்கிய 3 படங்கள் ரிலீஸ் ஆகின. எனவே ஒரு வருடம் ஓய்வு எடுக்க முடிவு செய்தேன்.

இந்த நிலையில் 'தலைநகரம்' பட இயக்குனர் சுராஜ் கதை சொன்னார். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நான் நடிக்க ஆரம்பித்து விட்டேன். டைரக்டர் என்ன சொல்கிறாரோ அதை செய்துவிட்டு வருகிறேன். டைரக்டராக இருப்பதை விட நடிகராக இருப்பது எளிது.

படத்தில் எனக்கு தாதா வேடம். டைரக்டர் என்றால் நிறைய யோசிக்கவேண்டும். இந்தப் படத்தில் அந்தப் பிரச்சினை இல்லை. எனக்கு அதிகம் பேசாமல் நடிக்கும் பாத்திரம். எனவே இதற்கும் நிறைய சிரமம் எடுத்து நடிக்க வேண்டி இருக்கிறது.

நான் டைரக்ஷன் செய்தபோது குஷ்புவிடம் எனது படத்தைப் பற்றி எந்தக் கருத்தும் கேட்கமாட்டேன். எடுத்த படத்தை போட்டுக் காட்டவும் மாட்டேன். ஆனால் நடிகரான பிறகு நிலைமை மாறி விட்டது. எப்படி நடிக்கவேண்டும்? என் நடிப்பு எப்படி இருக்கிறது? என்பது பற்றி குஷ்புவிடம் ஆலோசனை கேட்டு நடிக்கிறேன்.

'தலைநகரம்' படத்துக்குக் கிடைக்கும் வரவேற்பை பொறுத்தே எனது எதிர்கால நடவடிக்கை இருக்கும். எனது எதிர்கால பாதுகாப்பிற்காகத்தான் நடிப்புத்துறையிலும் இறங்கி இருக்கிறேன். எனது நடிப்புத் திறமையை இந்தப் படம் நிரூபிக்கும் என்று நம்புகிறேன் என்றார் சுந்தர்.சி.




'கலாபக் காதலன்'
ஆர்யா, ரேணுகா மேனன்

## காமெடி டிராக்

வடிவேலவனும், விவேகமானவரும் தாங்கள் நடிக்கும் படங்களின் நகைச்சுவை காட்சிகளை அவர்களே அமைத்துக்கொள்கிறார்கள். இதற்காகவே சம்பளத்துக்கு ஆட்களை வைத்து இருக்கிறார்கள்.

இவர்கள் பாணியில் மூன்றெழுத்து 'லி' நடிகரும் தனக்காக ஒரு காமெடி ரீமை உருவாக்கி இருக்கிறார். அவரிடம் 20 படங்களுக்கு நகைச்சுவை காட்சிகள் தயாராக உள்ளன.

'சித்திரம் பேசுதடி' பாவனா இப்போது ஆர்யா, பரத்துடன் 'வெயில்' படத்தில் நடித்து வருகிறார். அடுத்து எஸ்.எஸ்.ஸ்டான்லி இயக்கத்தில் ஸ்ரீகாந்த் நடிக்கும் புதிய படத் தில் அவருடன் ஜோடி சேருகிறார் பாவனா. தயாரிப்பு அந்தணன்.



'மாயக்கண்ணாடி' : சேரன் - நவ்யா

## பாக்யராஜின் காசு இருக்கணும்

'மனுநீதி' படத்தை தயாரித்த ஜி.ஆர் கோல்டு பிலிம்ஸ் பட நிறுவனம் தற்போது தயாரித்து கொண்டிருக்கும் படம் 'காசு இருக்கணும்'.

பாக்யராஜ் இதுவரை ஏற்றிராத அதிரடி வேடமேற்று இதில் நடிக்கிறார். இளம் கதாநாயகனாக விஸ்வா அறிமுகமாகிறார். கதாநாயகிகளாக நந்திதா, பாயல், லக்ஷா நடிக்கிறார்கள். இவர்களுடன் லிவிங்ஸ்டன், காதல் சுகுமார், பாண்டு, அருள், தம்பிராமய்யா, சார்லி, முத்துக்காளை, டேவிட் ஆகியோருடன் ஜி.ஆர் முக்கிய வேடம் ஏற்று நடிக்கிறார்.

ஒளிப்பதிவு: யு.கே.செந்தில்குமார். இசை: கவின்சாரதா. நடனம்: கூல் ஜெயந்த். எடிட்டிங்: மோகன்ராஜ். ஸ்டண்ட்: பவர் பாஸ்ட். பாடல்கள்: ஜி.ஆர். ஆசுரா.

கதை, திரைக்கதை, வசனத்தை ஜி.ஆர். எழுதுகிறார். டைரக்ஷன்: ஆர்.குமரன்– பிரியவன்.

இணை தயாரிப்பு: ஆர்.குமரன் – விஸ்வா. தயாரிப்பு: ஆர்.பி பூரணி.

படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாக்யராஜ் முதல் முறையாக பழிக்குப்பழி வாங்கும் ஆக்ரோஷமான வேடத்தில் நடிக்கிறார்.



'திருப்பதி' : அஜீத் - சதா

# சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரலில் அநீதி

## நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலுக்கு மாணவர்கள் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் நீதிச்சேவை ஆணைக் குழுவினால் நீதிமன்ற எழுதுநர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டதில் சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் தகைமையுடையவர்களுக்கு அநீதி இழைக்கப் பட்டுள்ளதாக வடமராட்சி சுருக்கெழுத்தாளர் கழகம் தெரிவித்துள்ளது.

எழுதுநர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் குறிப்பிட்ட கல்வித் தரத்தை மாத்திரம் கொண்டிருந்தால் போதும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் அதே நேரத்தில் சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்று நீதிமன்றங்களில் பயிற்சி பெற்றவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கலாம் என நிபந்தனை விதிக்கப்பட்டமை ஏதும் உள்நோக்கம் கொண்டதாக இருக்குமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

நீதிச்சேவை ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்ட வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரும் விளம்பரத்தின்படி சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பதவிக்கு தொழில்நுட்பக் கல்லூரியில் இதனைப் பயின்றவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். இப் பதவிகளுக்கு அரச திணைக்களங்களினால் நடத்தப்படும் முறைசாரா கல்விப் பிரிவில் சுருக்கெழுத்து, தட்டெழுத்துப்பயிலும் மாணவர்களும் மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக் குழுவில் (TVEC) பதியப்பட்டவேறு நிறுவனங்களில் பயில்பவர்களும், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) அனுசரணையின் கீழ் பயில்பவர்களும் விண்ணப்பிக்க முடியாத நிலையில் உள்ளனர். அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயின்ற மாணவர்கள் அரசாங்கத்தால் நடாத்தப்படும் பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றமுடியாத நிலை என்றால், அவ்வமைப் புக்களில் இப்பாடநெறிகளைப் பயிற்றுவிப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்ற கேள்வியும் எழுகிறது.

இதனால், பாதிக்கப்பட்டுள்ள இம் மாணவர்களின் நலன் கருதி எழுதுநர் பதவிக்கு எவரும் விண்ணப் பிக்கலாமென்று இருப்பது போன்று சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பதவிகளுக்கு தொழில் நுட்பக்கல்லூரியில்பயின்ற மாணவர்களுடன் ஏனைய நிறுவனங்களில் பயின்றோரும் விண்ணப்பிக்கத் தக்கவகையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென நீதிச் சேவை ஆணைக்குழுவைக் கேட்டுள்ளனர். (து)

## தபால் மூல வாக்களிப்பின்போது விசேட பாதுகாப்புவழங்கப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் 20, 21ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பின் போது விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப் படும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்தின தெரிவித் துள்ளார்.

தபால் மூல வாக்களிப்பு நடைபெறும் நாட்களில் பொலிஸார் கால் நடையாகவும் வாகனங்களிலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு -கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாக தபால் திணைக்களம் தெரிவித் துள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதியுடன் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் பூர்த்தியடையு மென்று தபால் மா அதிபர் தெரிவித் துள்ளார். (க-9)



பிராந்திய மனித உரிமைகள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரகுமார் குஜ்ரால், ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவை அவரது அலரிமாளிகை இல்லத்தில் சந்தித்தார்.





அவுஸ்திரேலியா குடிவரவு, பல் கலாசார அலுவல்கள் அமைச்சர் செனேற்றர் திருமதி அமன்டா வான்ஸ்ரோன் கடந்த வெள் ளிக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரது அலரி மாளிகை வாசஸ் தலத்தில் சந்தித்தார்.

## கூட்டம்

சாவகச்சேரி தமிழரசுக் கட்சியின் நகரசபை பிரதேச சபை வேட்பாளர்களுக்கான கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் இல்ல பணிமனையில் நடைபெறும் என்று ந. ரவிராஜ் அறிவித்துள்ளார்.

காலை 9.30 மணிக்கு நடைபெறும் இக் கூட்டத்தில் அனைத்து வேட்பாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (க-108)

## கோழி இறைச்சி, முட்டை விற்பனையில் வீழ்ச்சி

வெளிநாடுகளில் பறவைக் காய்ச்சல் நோய் தீவிரமாக பரவி வருவதனால் யாழ். குடாநாட்டில் கோழி இறைச்சி மற்றும் முட்டை விற்பனை யில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

பறவைக்காய்ச்சல் நோய் பற்றி ஊடகங்கள் மூலம் தெரிந்துகொண்ட மக்கள் கோழி இறைச்சி சாப்பிடுவதை நிறுத்தி வருவதாகவும் இதனால் சிறுதொழில் முயற்சியாக இறைச்சிக்கோழி வளர்தவர்கள் பெரும் நட்டத்தை எதிர் நோக்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். குடாநாட்டில் பறவைக் காய்ச்சல் நோய் இல்லை என்று அறிவிக்கப்பட்டும் மக்கள் மத்தியில் இவ்வாறான சந்தேகம் தொடர்ந்த வண்ணம் உள்ளது என கோழி வளர்ப்போர் கவலை தெரிவித்துள்ளனர். (க-132)

## காலாவதியான உப்பை விற்ற ஐவருக்கு அபராதம் விதிப்பு

கடந்த 16ஆம் திகதி யாழ். நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனை மேற்கொண்ட யாழ். மாநகர சுகாதார பரிசோதகர்கள் காலாவதியான உப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்த 5 வர்த்தகர்களை நீதிமன்றில் ஆஜர் செய்த போது குற்றப்பணமாக தலா 1000 ரூபா வீதம் செலுத்தும்படி நீதவான் உத்தரவிட்டார். (க-132,133)

அமரர் திரு சி. அரியகுட்டி அவர்கள் நினைவாக
வீனஸ் விளையாட்டுக்கழகம் கலையகம் ச.ச.நிலையம்
இணைந்து நடாத்தும் மாவட்ட ரீதியிலான

## கரப்பந்தாட்டச் (செற்-அப்) சுற்றுப்போட்டி-2006

**போட்டி நிபந்தனைகள்:-**

01. பங்குபற்றும் அணி பந்து கொண்டுவருதல் வேண்டும்.
02. குறிப்பிட்ட நேரத்துக்கு 15 நிமிடம் முன்னதாக மைதானத்தில் சமுகமளித்திருக்கவேண்டும். தாமதமாகவரும் அணிக்கு 15 நிமிட அவகாசம் அளிக்கப்படும் அதற்குள் சமுகமளிக்காது விட்டால் எதிரணிக்கு வெற்றி அளிக்கப்படும்.
03. போட்டி சம்பந்தமாக நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
04. போட்டிகள் A, B என இரண்டு பிரிவாக லீக் முறையில் நடைபெற்றுஈற்றில் இரண்டு பிரிவிலுமிருந்து புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்ற இவ்விரண்டு கழகங்கள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படும். அரை இறுதிப்போட்டி விலகல்முறையில் நடைபெறும்.
05. வெற்றி பெறும் கழகத்திற்கு வெற்றிக்கிண்ணத்துடன் பணப் பரிசும் வழங்கப்படும்.

**25.03.2006 :- விண்ணப்ப முடிவு**

**விண்ணப்பிக்கும் முகவரி-**

தலைவர், வீனஸ் வி. கழகம் ஆவரங்கால் கிழக்கு,
மணற்பகுதி, புத்தூர்.
மேலதிக விபரங்கள் தேவைப்படின் தலைவர்,
செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**ஊடக அனுசரணை : வலம்புரி-சங்குநாதம்**

உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின்

## சுழற்சி முறைக் கடன் வழங்கும் நிகழ்வு





தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையில் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தினால் சுழற்சி முறையிலான கடன் வழங்கும் நிகழ்வொன்று கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி உமையாள்புரத்தில் இடம்பெற்றது. உமையாள்புரம் கிராமத்தில் அமைந்துள்ள 'கலையரசிமுன் பள்ளியில்' மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வு உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவன இணைப் பாளர் திருமதி கே. தேவிகா தலைமையில் இடம் பெற்றது.

பெண்களின் சுயபொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் கால்நடை வளர்ப்புக்காக உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் இந்தச் சுழற்சிமுறையிலான கடன் தொகை 13 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

யூஎன்டிபி. அமைப்பின் நிதிப்பங்களிப்பில் 60 பயனாளிகளுக்கு வழங்கப்படவிருந்த கடன் தொகையில் 13 பயனாளிகளுக்கே முதற் கட்டமாக வழங்கப்பட்டது. ஏனைய பயனாளிகளுக்கான கடன்தொகைகள் அடுத்த கட்டங்களாக வழங்கப்படவிருக்கிறது.

இதேபோன்று போர்ச் சூழல்களினாலும் சமூகப் பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய நிலையில் காணப் படுகின்ற சில கிராமங்களிலுள்ள பல பெண்களுக்கும் அவர்களது சுய பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு மேலும் நான்கு மில்லியன் ரூபா நிதியைக் கொண்ட சுழற்சி முறையிலான கடன் தொகை வழங்கப்படவிருக்கின்றதாகத் தெரிவிக்கப் படுகிறது. இந்த நிகழ்வில் ஊரக மேம்பாட்டு பேரவை திருமதி ச. ஜனாகி, பரந் தன் பிரதேச மாதர் சங்கத்தலைவி திருமதி சி. கமலேஸ்வரி, வடக்கு-கிழக்கு வீட மைப் புத்திட்ட கல்வி தொடர்பான ஆலோசகர் அமுதன் மற்றும் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர்கள், கிராம மக்களெனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (க)

## இன்று ஒரு தகவல்

# காலம் பொன்னானது

ஒரு அலுவலர் தன்னுடன் வேலை செய்யும் ஒரு பணியாளரைப் பார்த்து "வேலை 10 மணிக்கு ஆரம்பம். நீ 11 மணிக்கு வருகிறாயே" என்று கேட்டிருக்கிறார். "வீட்டில் அசந்து தூங்கிவிட்டேன் சார்! எழுந்திருக்க நேரமாகிவிட்டது" என்றார் அவர். "அடடா! நீ வீட்டிலும் தூங்கிறாயா? "என்று ஆச்சரியமாகக் கேட்டாராம் அந்த ஆள். இது நாம் சகஜமாக சந்திக்கும் ஒரு நிகழ்ச்சி தான். இருந்தாலும் "காலம் பொன்னானது. கடமை கண்ணானது" என்று ஆங்காங்கே கண்ணில் படுவது போல் எழுதி வைத்திருப்போம். கண் திறந்திருந்தால் தானே அந்த வாசகம் கண்ணில் படும்? நமது கதையெல்லாம் நம்மோடு இருக்கட்டும். பெரியவர்களின் வாழ்வில் நடந்த சில சம்பவங்களை நினைத்துப் பார்த்தால் அவர்கள் எந்தளவிற்குக் காலத்தைப் பொன்னாக கருதியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

குஜராத் மக்கள் எல்லோரும் ஒருமுறை காந்தியடிகளிடம் போய் "எங்கள் ஊரில் ஒரு மாநாடு நடத்த வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அந்த மாநாட்டுக்கு நீங்கள்தான் வந்து தலைமை தாங்க வேண்டும்" என்று பிரியமாகக் கேட்டுக் கொண்டார்கள். காந்தியடிகளும் சரியென்று ஒத்துக்கொண்டார். குஜராத்தில் கோத்ரா என்று ஒரு இடம். அங்குதான் அந்த மாநாடு நடந்தது.

சரியாகக் குறிப்பிட்ட நேரத்திற்கு அந்த மாநாட்டிற்குப் போய் தனது இடத்தில் போய் உட்கார்ந்துகொண்டார் காந்திஜி. ஆனால் அந்த மாநாட்டில் பேசுவதற்கு ஒப்புக் கொண்டிருந்த திலகர் அரைமணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்தார். ஆனால் திலகர் வந்து சேர்வதற்குள் காந்திஜி குறிப்பிட்ட நேரத்தில் தனது தலைமையுரையை ஆரம்பித்துவிட்டார். அவர் பேசிக்கொண்டிருந்த சமயத்தில்தான் திலகர் வந்து சேர்ந்தார். காந்திஜி அதைக் கவனித்தார். திலகர் தாமதமாக வருகிறார் என்பதை தனது பேச்சிலேயே குறிப்பிட்டார். "இந்தியா சுதந்திரம் அடைவதில் அரைமணி நேரம் தாமதமானால் அந்தப்பழி திலகரின் தலையில் தான் விழும்.அவர் இன்று அரைமணி நேரம் தாமதமாக வந்திருக்கிறாரே அதனால்த்தான் அப்படிச்சொன்னேன்" என்றார்.

இப்படிக் கூறிவிட்டு புன்முறுவலோடு திலகரைப் பார்த் தார் காந்திஜி. அந்தப் பார்வையில் கனிவு மட்டுமல்ல கண் டிப்பும் இருந்தது என்பதை அங்கிருந்த எல்லோரும் புரிந்து கொண்டார்களாம். காந்திஜி காலத்திற்குக் கொடுத்த முக்கியத்துவம் இது.

எமர்ஸன் என்று ஒரு சிந்தனையாளர் இருந்தார். அவர் ஒரு முறை ஐரோப்பாவிற்குப் பயணம் போனார். அப்போது லண்டனுக்கும் சென்றார். கவிஞர் கோல்ரிட்ஜ் அப்போது லண்டனில் இருந்தார்.

அந்தக் கவிஞரைச் சந்தித்துப் பேசவேண்டும் என்று ஆசைப்பட்டார். உடனே அவரது வீடு எங்கிருக்கிறது என்று தேடிக் கண்டுபிடித்துப் போனார். இவர் போய்ச் சேர்ந்த போது காலை மணி 10. அந்தநேரம் கவிஞர் கோல்ரிட்ஜ் தூங்கிக் கொண்டிருந்தார். அங்கிருந்தவர்களிடம் விசாரித்தார் எமர்ஸன். கவிஞர் இன்னும் எழுந்திருக்கவில்லை. பகல் 12 மணிக்குப் பின்பு வந்தால் அவரைப் பார்க்கலாம் என்று சொன்னார்கள். உடனே இவர் திரும்பிவந்துவிடவில்லை. 12 மணிவரை அங்கே காத்துக்கொண்டிருந்தார். அவர் எழுந்த பின்பு சந்தித்துப் பேசினார்.

எமர்ஸன் தனக்காக நீண்டநேரம் காத்துக்கொண்டு இருந்திருக்கிறார் என்ற விஷயம் கோல்ரிட்ஜுக்குத் தெரிய வந்தது. உடனே அவர் என்ன செய்தார் தெரியுமா? "மிஸ்டர் எமர்ஸன்! உங்களை இரண்டு மணிநேரத்திற்கு மேல் காக்க வைத்துவிட்டேன். அதற்கு தண்டனையாக இங்கு நான் நின்றுகொண்டே உங்களோடு பேசுகிறேன்.நீங்கள் உட்காருங்கள்" என்றாராம். கவிஞர் கோல்ரிட்ஜ் எமர்ஸனுக்கு மட்டுமல்ல காலத்துக்கும் சேர்த்துக் கொடுத்த மரியாதை அது.

சி.வி. இராமன் இருந்தாரல்லவா? அவர் பேசவேண்டிய கூட்டம் ஒன்று மாலை 6மணிக்கு ஆரம்பமாகவிருந்தது. மைசூர் சமஸ்தானத்தில் இருந்த ஒரு பெரிய உயர் அதிகாரி அந்தக் கூட்டத்திற்குத் தலைமைதாங்க இருந்தார். சி.வி. இராமன் குறிப்பிட்ட நேரத்திற்கு 10 நிமிடங்கள் முன்பே அங்கே வந்து சேர்ந்துவிட்டார். தலைமை தாங்கவேண்டியவர் வந்து சேரவில்லை. சி.வி.இராமனோ காலத்திற்கு மரியாதை கொடுப்பவர். கடிகாரத்தில் மணி 6 அடித்தது. கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தவர்களுக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. தலைவர்இன்னும் வந்து சேரவில்லை. குறிப்பிட்ட நேரத்துக்கு எழுந்து மேடைக்கு போனார். பேச ஆரம்பித்துவிட்டார். தலைமை இல்லாமலே! பேச்சை ஆரம்பித்தது எப்படி தெரியுமா? "இதுவரை தரிசனம் அளிக்காத தலைவர் அவர்களே! "என்று ஆரம்பித்தார்.

இந்த சம்பவத்தை இந்தக் காலத்துப் பேச்சாளர் ஒருவரிடம் சொன்னேன். "அது என்ன சார் பெரிய விஷயம்? நான் அதைவிட ஒருபடி மேலே" என்றார். 'எப்படி? என்று கேட் டேன். "அவர் தலைவர் இல்லாமல் பேச்சை ஆரம்பித்தார் என்று தானே சொன்னீர்கள். நான் கூட்டம் இல்லாவிட்டாலும் கூட பேச ஆரம்பித்துவிடுவேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சொல்ஹெய்மின் முடிவுக்கு ஜே.வி.பி வரவேற்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சியிலிருந்து ஒதுங்கிக் கொள்ளப்போவதாக நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் அறிவித்துள்ளமை சமாதானசெயற்பாடுகளில்ஆரோக்கியமான சூழலை உருவாக்கும் என்று ஜே.வி.பி.யின்பாராளுமன்ற உறுப்பினரும்அக் கட்சியின்வெளிவிவகாரங் களுக்கான செயலாளருமானவிஜித்தஹேரத் தெரிவித்தார்.



இருப்பினும் நோர்வே முற்று முழுதாக விலகிய பின்னரே இலங்கையின் சமாதான செயற்பாடுகள் முழுமைபெறும் என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் சமாதான முயற்சியிலிருந்து ஒதுங்கிக்கொள்ளப் போவதாக எரிக்சொல்ஹெய்ம் அறிவித்துள்ளமை குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

ஜே.வி.பி உட்பட இந் நாட்டின் தேசப் பற்றாளர்களின் அழுத்தங்களே எரிக்சொல்ஹெய்ம் சமாதான செயற்பாடுகளிலிருந்து விலகுவதற்கான காரணமாகும்.

எரிக்சொல்ஹெய்ம் சமாதான முயற்சி விவகாரங்களிலிருந்து விலகுவதன் மூலம் இலங்கையின் சமாதான செயற்பாடுகளுக்கு எதிர்காலத்தில் எந்த வித மான பாதிப்பும் ஏற்படாது. குறிப்பாக இதனால் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாது என்றார். (க)

# த.பு.கழக பணியாளர்களை விடுவிக்ககோரி முன்பள்ளிச் சிறார்கள் கண்டனப் பேரணி

(கிளிநொச்சி)

மட்டக்களப்பில்தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுப் பிரிவுப் பணியாளர்கள் கடத்தப்பட்டு இதுவரை காலமும் விடுவிக்கப்படாததைக் கண்டித்தும் உடனடியாக விடுவிக்க வேண்டுமெனக் கோரியும் மன்னார்மடுவலய முன்பள்ளிச் சிறார்களின் கண்டனப்பேரணி ஒன்று நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இப்பேரணியின் முடிவில் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர், மன்னார்மறைமாவட்ட ஆயர், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, ஐக்கிய நாடுகள் அகதிகள்உயர்ஸ்தானிகர் ஆலயம், யுனிசெப் சிறுவர் பாதுகாப்பு நிதியம், மன்னார் மாவட்ட அரசியல்துறை ஆகியோருக்கான மகஜர்கள் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் சி. சுதாகரிடம் முன்பள்ளிச் சிறார்களினால் கையளிக்கப்பட்டன.

இப்பேரணியில் மடு வலயத்திற்குட்பட்ட 20 முன்பள்ளி ஆசிரியர், மாணவர்களும், தமிழர் புனர் வாழ்வுக் கழகப் பணியாளர்களும், பொதுமக்களுமென பெருமளவானோர் கலந்துகொண்டனர். (க)

# முறை சாராக் கல்விப் பயிற்சி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தின் 2006ஆம் ஆண்டுக்கான முறைசாராக் கல்விக்கான பயிற்சிநெறிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. இப் பயிற்சி நெறிகள் பின்வரும்பாடசாலைகளில்ஆரம்பமாக உள்ளன.

கணனி மென்பொருள் பயிற்சி நெறி–கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், கணனி வன்பொருள் பயிற்சிநெறி–மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திலும், தையல் பயிற்சி நெறி–வரணி மகாவித் தியாலயத்திலும், சிகையலங்காரம்/ஐசிங் பயிற்சிநெறி–கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்திலும், பேச்சுமூல ஆங்கிலப் பயிற்சிநெறி–கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

இப்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்களை குறிப்பிட்ட பாடசாலைகளில் பெற்று எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு தென்மராட்சி முறைசாரா உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

மேலும் 2005ஆம் ஆண்டுக்கான முறைசாராக் கல்வி பயிற்சிநெறியை முடித்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி பிற்பகல் 3.00மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

முறைசாரா உதவிப் பணிப்பாளர் பொ.பாலசுந் தரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தென் மராட்சி வலயப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பார்.

மற்றும் கணனி மென்பொருள், பேச்சுமூல ஆங்கிலம், சிகையலங்காரம் ஆகிய பயிற்சி நெறிகளை ஏற்கனவே பூர்த்தி செய்தவர்களும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (க–108)

# அமைச்சர்களிடையே ஊழல் மோதல்; அதிவேக ரயில் பாதைத்திட்டம் ரத்து!

(கொழும்பு)

இலங்கையின் இரத்மலானைக்கும் கட்டுநாயக்கவுக்கும் இடையேயான உத்தேச அதிவேக ரயில் பாதை அமைக்கும் திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரத்துச் செய்துள்ளார்.

இந்த ரயில் பாதை அமைக்க தனி அமைச்சு ஒன்று இருந்தபோதும் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுடன் மற்றொரு அமைச்சு இத்திட்டத்துக்காக இரகசிய ஒப்பந்தம் ஒன்றை செய்தது தெரியவந்தது.

இதையடுத்து இத்திட்டத்தை இரத்துச் செய்ய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டார் இலங்கைப் பொறியியலாளர்களின் மதிப்பீட்டின்படி இத்திட்ட மதிப்பீடு 100 மில்லியன் அமெரிக்க டொலர் .ஆனால் வெளிநாட்டு நிறுவனம் 276 மில்லியன் டொலர் மதிப் பீட்டை அளித்துள்ளது.

இலங்கை அரசின் முக்கிய அமைச்சர் ஒருவரின் மகன் இத்தகைய இரகசிய ஒப்பந்தத்தில் ஈடுபட்டது தெரியவந்ததால் அமைச்சர்களிடையே முறுகல் நிலை தேன்றியுள்ளது. இதனால் இத் திட்டத்தை உடனடியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரத்து செய்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

## தேசிய பட்டியல் மூலமாக

# பாராளுமன்ற உறுப்பினராக எஸ்.பி.திஸநாயக்க முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவரான எஸ்பி.திஸநாயக்க தேசிய ப்பட்டியலிலூடாக பாராளுமன்றஉறுப்பினராக முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் எஸ்.பி.திஸ நாயக்க சிறையில் அடைக்கப்பட்டதால் அவரது பாராளு மன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது அவரது பாராளு மன்ற ஆசனத்துக்கு ரேணுகா ஹேரத் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் எஸ்.பி.திஸநாயக்க வகித்து வந்த நுவரெலியா மாவட்ட ஐ.தே.க தலைவர் பதவியும் நவீன் திஸநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டது.இந்நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரியவுக்குப் பதிலாக எஸ்.பி.திஸநாயக்கவை நியமிக்க வேண்டும்என்றுஅவரது ஆதரவாளர்கள்கோரியுள்ளனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எஸ்.பி. திஸ நாயக்க தீவிர பரப்புரையில் ஈடுபட உள்ளதால் பாராளுமன்ற உறுப்பினர் பதவி மற்றும் கட்சிப் பதவி இரண்டையும் அவர் வகிப்பது ஐ.தே.கவுக்கு பலம் சேர்க்கும் என்றும் எஸ்.பி.திஸநாயக்கவின் ஆதரவாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

இதையடுத்தே ரணில் விக்கிரமசிங்கவுடன் இது தொடர்பில் எஸ்.பி.திஸநாயக்க ஆலோசனை நடத்தியுள்ளார். இதேவேளை, எஸ்.பி.திஸநாயக்கவின் இந்த முயற்சியால் ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் உள்முரண்கள் வெடிக்கும் நிலை இருப்பதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (க)

## துணைக்குழுக்களின் செயற்பாடுகளை கண்டித்து

# மட்டக்களப்பில் ஹர்த்தால்

(கொழும்பு)

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணு வக் குழுக்களின் ஆட்கடத்தல் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதை கண்டித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் ஹர்த்தால் நடத்தப்பட்டது.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினரால் இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. வர்த்தக நிறுவனங்கள், அரச அலுவலகங்கள், சந்தைகள், பாடசாலைகள், அரச மற்றும் தனியார் வங்கிகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

கல்முனை மற்றும் வாழைச் சேனையை மட்டக்களப்புடன் இணைக்கும் பிரதான வீதிகளில் ரயர்கள் எரிக்கப்பட்டு வீதித் தடைகள் போடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் முக்கிய பகுதிகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதனிடையே நேற்று முன்தினம் காலை 9 மணி அளவில் மட்டக்களப்பு, திருகோணமலை வீதியில் உள்ள இலங்கைப் போக்குவரத்து சபைக்குள் நுழைந்த துணை இராணுவக் குழுவினர் சாரதிகளையும் நடத்துநர்களையும் தாக்கி பேரூந்துகளை இயக்க நிர்பந்தித்துள்ளனர்.

வெள்ளை வானில் துணை இராணுவக் குழுவினர் வந்துதாக்கியதாக போக்குவரத்துச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)



# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

78 மீள்பார்வை



டி.எஸ்.என்: நீங்கள் இதுவரை வாங்கிய விருதுகளையெல்லாம் வரிசைப்படுத்திப் பார்க்கும் போது எது மிகப் பெருமையாகத் தெரிகிறது?

சிவாஜி: என் கலைச் சேவைக்காக பல விருதுகள் கிடைத்தன. நடிப்பிற்காகவும் நான் நடித்த படங்களுக்காகவும் தமிழக அரசும் மத்திய அரசும் எத்தனையோ பரிசுகளைத் தந்து கௌரவித்தார்கள். சினிமா ரசிகர்கள் சங்கம் சினிமா பத்திரிகைகள் போன்றவர்களும் விழாக்கள் நடத்திப் பாராட்டி பரிசுகள் தந்தார்கள் பிரெஞ்ச் அரசாங்கத்தின் செவாலியே விருதும் கலைஞர்களுக்குக் கொடுக்கப்படும். கௌரவமிக்க தாதா சாகேப்பால்கே விருதும் கிடைத்தது.

ஆனால் இவையெல்லாவற்றிற்கும் மேலாக நான் ஒரு தேச பக்தியுள்ள இந்தியன் நாட்டின் நல்ல பிரஜை என்று பாராட்டி எனக்குக் கொடுக்கப்பட்ட பத்மஸ்ரீ , பத்மபூஷண் போன்ற விருதுகள் தான் மிகவும் உயர்ந்தது என்று நான் கருதுகிறேன். என் பெற்றோர்கள் மற்றும் பெரியோர்களின் ஆசியும் மக்களின் ஆதரவும் இறைவனின் அருளும் இருந்தால்தான் இந்த கௌரவங்களை நான் பெற முடிந்தது.

### நான் விரும்பும் வேடம்

டி.எஸ்.என்: ஒரு நடிகன் என்ற முறையில் நீங்கள் போடாத வேடமில்லை. இதுவரை நீங்கள் போட்ட வேடங்களில் உங்களை மிகவும் பாதித்த வேடம் எது இனி நீங்கள் போட விரும்பும் வேடம் ஏதாவது உண்டா?



சிவாஜி: நான் போடாத வேடங்கள் இல்லை என்று சொல்ல முடியாது இன்னும் எவ்வளவோ இருக்கலாம் கற்றது கைமண் அளவுதானே. என்னைப் பாதித்த வேடம் பற்றிக் கேட்டீர்கள் என் நடிப்பின் பாதிப்புத்தான் என் வேடங்களில் உண்டானதே தவிர வேடங்கள் என்னை எப்போதுமே பாதித்ததில்லை.

நடிப்பு என் மூச்சு நடிப்பு என் உயிர் நடிப்பு ஒன்றுதான் எனக்கு தெரிந்த தொழில் எனவே என் நடிப்பின் பாதிப்பால்தான் நான் போட்ட வேடங்கள் மக்களை கவர்ந்தது. எத்தனையோ வேடங்கள் போட்டாலும் இனி வரும் நாளில் ஒரே ஒரு வேடம் போட வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறேன் அது தந்தை பெரியார் போல் நடிக்க வேண்டும் என்பது சிவாஜி என்ற பட்டத்தைத் தந்தவர் அவர் அல்லவா அவருடைய ஞாபகமாக அவர்களுடைய கேரக்டரை ஒரு பாத்திரமாகவே ஏற்று நடித்துப் பெருமை பெற வேண்டும் என்பது அவா. அது எந்த நேரத்தில் எப்படி நிறைவேறுகிறதோ தெரியவில்லை.

### குடும்பத்தினருடன் நான்

டி.எஸ்.என்: உங்களுடைய பலதரப்பட்ட வாழ்க்கையை நினைவுகூர்ந்தீர்கள் மீண்டும் உங்கள் குடும்ப வாழ்க்கை பற்றி பேசுவதற்காக ஒரு கேள்வி. உங்களுடைய பிள்ளைகள் எப்படி இருக் கிறார்கள்? எத்தகைய பொறுப்புகளை ஏற்றிருக்கிறார்கள்? பேரன் பேத்திகள் எப்படி இருக்கிறார் கள் என்பதைப் பற்றிக் கூறுங்கள்.

சிவாஜி: இப்போது குடும்பத்துடன் அதிக நேரம் செலவழிக்க ஆண்டவன் அருள் புரிந்திருக்கிறார்.

1952ஆம் ஆண்டில் கமலா என்கிற பெண்ணுக்கும் எனக்கும் திருமணம் ஆனது உறவு முறையில் அவள் எனது அக்காள் மகளாவாள். நான் ஏற்கனவே சொன்னது போல் பெரிய குடும்பத்துக்கு தலைவன் நான் எனக்கு நான்கு குழந்தைகள்.

முதல் பெண் சாந்தி அவளுடைய கணவர் டாக்டர் கே.நாராயணசாமி அவர் ஐ.ஐ.டியில் புரப்ஸர் அவர்களுக்கு விஜயலட்சுமி, சத்தியலட்சுமி என்ற இரண்டு பெண்கள் அவர்களுக்கும் கல்யாணமாகி குழந்தைகளும் பிறந்துவிட்டன.

அடுத்தது என் மூத்த மகன் ராம்குமார் என் தங்கை பத்மாவதியின் மகள் கண்ணம்மாவைத் தான் அவருக்கு திருமணம் செய்து வைத்தோம். அவர்களுக்கு மூன்று ஆண்குழந்தைகள் அருமையான பெயர்கள் துஷ்யந்த், தர்ஷன் , ரிஷ்யன்.

தர்ஷனும், ரிஷியும் சின்னப் பிள்ளைகள் தைரியமாக என் கிட்டே வந்து கட்டபொம்மன் வசனம் பேசிக் காட்டுகிறார்கள். வந்தே மாதரம் இன்குலாப் ஜிந்தாபாத் என்று உரத்தகுரலில் என்னைப் போல் நடித்துக் காட்டுகிறார்கள். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. என் தம்பி சண்முகத்திற்குப் பிறகு என் மகன் ராம்குமார் தான் சிவாஜி பிலிம்ஸ் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்.

அதற்கடுத்தவர் நடிகராக இருக்கும் என் இளைய மகன் பிரபு. அவர் மனைவி புனிதவதி அவர்களுக்கு ஒரு பெண்ணும் ஒரு பையனும் இருக்கிறார்கள் அவர்கள் பெயர் ஐஸ்வர்யா, விக்ரம்.

அதற்கடுத்து என் இளைய மகள் தேன்மொழி அவள் கணவர் டாக்டர் கோவிந்தராஜன் குழந்தைகளுக்கு வைத்தியம் செய்வதில் திறமைசாலி. அவர் என் மாப்பிள்ளை நாராயணசாமியின் தம்பி அவர்களுக்கும் ஆண், பெண் என இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள் அவர்களில் பெரியவள் பிரியதர்ஷினி திருமணமாகி இப்போது அமெரிக்காவில் இருக்கிறாள். அவள் தம்பி பெயர் குணால் இன்ஜினியரிங் படிக்கிறான் எல்லோருமே இப்போது பெரிய பெரிய ஆட்களாக இருக்கிறார்கள்.

என் சகோதரன் சண்முகம் இப்போது இல்லை அவர் இறந்துவிட்டார். அவர் மனைவி அலமேலு. அவர் என் மனைவி கமலாவின் தங்கை தான் அவர்களுடைய இரண்டாவது மகன் கிரியும் குடும்பத்தோடு எங்களுடன் இருக்கிறார் அவரும் சிவாஜி பிலிம்ஸ் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் .கிரியின் மனைவி அனுராதா அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் ஒருவன் ஸ்ரீமத் இன்னொருவன் சிவ்ஜி அவன் என் பெயரைச் சுருக்கிவைத்துக்கொண்டிருக்கிறான். (தொடரும்)



## தவக்கால சிந்தனை

'ஆண்டவரே! நிலை வாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன''

எருசலேம் ஆலயம் யூதர்களின் இதயத்திற்கு மிக நெருக்கமான ஒன்று. கடவுளின் பிரசன்னம் தாங்கிய திருப்பேழை இங்கு வைக்கப்பட்டதால் கடவுளின் வீடாகவே ஆலயம் கருதப்பட்டது. பாலைவனப் பயணத்தில் திருப்பேழை கூடாரத்தில் வைக்கப்பட்டதும் தாவீது ஆண்டவனுக்கான ஆலயம் அமைக்க தாகம் கொண்டதும், கடவுளின் திட்டத்தில் சாலமோனே அதை நிறை வேற்றியதும் வரலாறு! உலகின் ஆலயங்கள் பலவும் மனிதனின் அடக்க இயலாத பொருளாசையில் வியாபாரத் தலங்களாகி விட்டன என்பதுவும் மறுக்க முடியா உண்மை! எருசலேம் ஆலயமும் அதற்கு விதி விலக்கல்ல. உண்மை ஆலயமாக உலாவந்த இயேசு தெய்வம் தன் தந்தையின் உண்மை வழிபாட்டுக் கூடம் நடமாடும் ஆலயங்களாகிய மனிதனைச் சுரண்டும் சந்தைக்கூடமாகத் திகழ்வதைக்கண்டு துடித்தெழுகிறார். இன்றும் நம்மை உயிருள்ள ஆலயங்களாக்கி உண்மை வழிபாட்டை ஆவியிலும். உண்மையிலும் நிகழ்த்துவதே இறைவனின் விருப்பம். ஆலயங்களும் வழிபாடும் இதற்கு துணை புரிவதற்காகவே

காவலன்

## தம்புள்ள , தம்புலுகலவில் 200குரங்குகள் இறந்துள்ளன

(கொழும்பு)

தம்புள்ள, தம்புலுகல பிரதேசத்தில் சுமார் இருநூறு குரங்குகள் திடீரென இறந்துள்ளன. பெருந்தொகை குரங்குகள் இறந்ததையறிந்த மக்கள் உடனடியாக தம்புள்ள பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். தம்புள்ள பொலிஸாரும் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று இறந்து கிடக்கும் குரங்குகளை பார்வையிட்டுள்ளனர்.

பின்னர் பொலிஸார் இவ்விடயத்தை உடனடியாக வனவிலங்கு பரிபாலன திணைக்களத்துக்கு அறிவித்ததையடுத்து திணைக்கள அதிகாரிகள் அங்கு சென்று பார்வையிட்டதுடன் பரிசோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த குரங்குகள் நோய் வாய்ப்பட்டு இறந்தனவா அல்லது அவை சாப்பிட்ட உணவில் நச்சுத்தன்மை இருந்துள்ளதா? என்பதைக் கண்டறிய பொலிஸாரும் வனவிலங்கு திணைக்கள அதிகாரிகளும் கூட்டு சேர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (க)

## ஈழத்தமிழர் பிரச்சினையில் அ.தி.மு.கவின் நிலைப்பாடு என்ன?

### விளக்கமளிக்கிறார் காளிமுத்து

(கொழும்பு)

ஈழத்தமிழர் பிரச்சினையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவின்நிலைப்பாடு என்ன? என்று அக்கட்சியின் அவைத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான கா.காளிமுத்து விளக்கம் அளித்துள்ளார். ஆங்கில இணையத்தளத்துக்கு வழங்கிய நேர் காணலின் போதே அவர் இவ் விளக்கத்தை அளித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை உங்கள் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர்களான வைகோ அத்துடன் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் மறுமலர்ச்சி தி.மு.க.ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளீர்கள் . தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பிலான உங்கள் கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம்ஏற்பட்டதாக அர்த்தமா? எனக்கேட்டதற்கு பதிலளித்த காளிமுத்து தமிழகத்தில் எதுவித ஆயுதக் குழுவினரது நடமாட்டமும் இருக்கக் கூடாது என்பதில் அம்மா (முதல்வர் ஜெயலலிதா) உறுதியாக உள்ளார். அதே நேரம் அனைத்துத் தமிழர்களும் ஒற்றுமையாக இருக்கவேணடும் என்பதிலும்அவர் உறுதியாகவுள்ளார் என்றார்.

அனைத்துத் தமிழர்களும் என்றால்? தமிழ் நாடு மற்றும் இலங்கையில் வாழும் தமிழர்களையும் சேர்த் தா? நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் எனக் கேட்டதற்கு ஆமாம் தமிழ்நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் வாழ்கின்ற தமிழர்களைத்தான் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரிப்பது என்பதும் அனைத்துத் தமிழர்களை ஆதரிப்பது என்பதும் இரு வேறு விடயங்கள்.

எமது நண்பர்களான வைகோ., திருமாவளவனும் கூட தமிழகத்தில் பயங்கரவாதிகள் நுழைவதை விரும்பமாட்டார்கள் என்றார் காளிமுத்து. (கு)

## 7, 19 , 038 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்

உள்ளூராட்சித் தேர்தலை உரிய காலப்பகுதியில் நடத்தி முடிப்பதற்கு யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களம் முழுமையான அளவில் செயற் பட்டு வருகின்றது. யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இரண்டு நிர்வாக மாவட்டங்களும் உள்ளடங்குகின்றன.

யாழ். நிர்வாக மாவட்டத்தில் ஒரு மாநாகர சபை 13 பிரதேச சபைகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பிரதேச சபைகளுமாக 20 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. 20 உள்ளூராட்சி சபைகளுக்கும் 7 இலட்சத்து 19 ஆயிரத்து 38 வாக்காளர்கள் வாக்களிக் கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் வாக்களிப்பதற்கு எல்லாமாக 624 வாக்குச் சாவடிகள் நிறுவப்படவுள்ளன.

கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் 95 வாக்களிப்பு நிலையங்களும் யாழ் நிர்வாக மாவட்டத்தில் 527 வாக்களிப்பு நிலையங்களும் நிறுவப்படவுள்ளன. (க-7)

## ஸ்ரீ.சு.கவின் புதிய தலைவராக தர்மதாச வன்னியாராச்சி?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தலைவராக தர்மதாச வன்னியாராச்சி நியமிக்கப்படக்கூடும் என்று தெரிகிறது. கொழும்பில் கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெற்ற அக்கட்சி யின் மத்திய குழுக் கூட்டத்தில் தர்மதாச வன்னியாராச்சியின் பெயர் பரிந்துரைக்கப்பட்டதை ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்ப உறுதிப் படுத்தியுள்ளார்.

இதேவேளை, கட்சியின் தலைவராக இருந்த சந்திரிகா குமாரதுங்க தனது தலைமைப் பதவியை வேறு ஒருவருக்கு மாற்றிவிட முடியாது அவர் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவர்தான் தலைவராகச் செயற்பட முடியும் கட்சிக்குதற்காலிகத் தலைவர் என்பது கட்சியின் யாப்பிற்கு எதிரானது என்றும் அனுரா பிரியதர்சன யாப்ப சுட்டிக்காட்டினார். (க)

# வீதிகளுக்கு கிறைனற் கற்கள்; பயன்படுத்துவதை பரிசீலிக்குக!

## அரச அதிபருக்கு மாநகர ஆணையாளர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை நிர்வாகம் இந்த ஆண்டில் வீதி அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் இதனால் வீதி அபிவிருத்தி வீதி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவை தமது வீதிகளுக்கு கிறைனற் கற்கள் பாவிப்பதை உறுதிப்படுத்துவதற்கான பணிப்புரை விடுப்பதை பரிசீலிக்குமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷை யாழ்.மாநகர ஆணையாளர் கேட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தின் விபரம் வருமாறு,

இவ்வாண்டில் சுமார் 2 1/2 மாதங்கள் நிறைவுற்றுள்ள போதிலும் வீதி அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலையை எமது மாநகரசபை நிர்வாகம் எதிர் நோக்கியிருப்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

நிதிப் பிரமாணங்கள் மற்றும் ஏனைய சட்ட விதிகளுக்கேற்ப கேள்வி மற்றும் கூறுவிலை நடைமுறைகளைப்பின்பற்றிக் கொள்வனவு செய்யும்பொழுது வேண்டுமென்றோ அல்லது சுயநலத்திற்காகவோ சிலர் குறைந்த கூறுவிலைகளைச் சமர்ப்பித்துவிட்டு பின் கட்டளை அனுப்பப்படுகின்ற பொழுது, விநியோகிக்கத் தவறுவதும், தாமதப்படுத்துவதுமான நிலையை நாம் எதிர்நோக்கி வருகின்றோம்.

இந்த நிலையை முறையாகக் கையாள்வதெனின், இவ்வாறான கூறுவிலைகாரர்களைத் தவறிழைத்தோர் பட்டியலில் சேர்த்து மீண்டும் கேள்வி சமர்ப்பிக்காதவாறு பார்த்துக்கொள்வது அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

இவ்வாறு தவறிழைத்தோர் பட்டியலில் சேர்க்கப்பட்டோர் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களிலும் திணைக்களங்களிலும் கேள்வி சமர்ப்பிக்கத் தடை செய்வதன் மூலமே நிலைமையை சீர்செய்யலாமெனக் கருதுகின்றேன்.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வீதி வேலைகள் மேற்கொள்ளப்படுவதால் உள்ளூராட்சி சபைகள் மாவட்டத்திலுள்ள சுண்ணாம்புக் கல்லையே பாவித்து வருகின்றனர். இதேநேரம் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களம் போன்றவை பாரிய வீதிகளைப் பராமரிப்பதற்கு கிறைனற் கற்களையே பாவிக்க வேண்டுமென்றும், அதிபார வாகனங்கள் செல்லும் வீதிகளுக்கு இவ்வாறு பாவித்தல் அவசியமென்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தும், அவர்களும் மாவட்டத்திலுள்ள சுண்ணாம்புக் கல்லையே பாவிப்பதனால் சுண்ணாம்புக் கல்லிற்கான கேள்விகள் அதிகரித்து விலைகள் அதிகரித்து விநியோகங்கள் குறைந்து அபிவிருத்தி வேலைகள் தாமதப்படுகின்றது.

ஆகவே வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவை தமது வீதிகளுக்கு கிறைனற் கற்களைப் பாவிப்பதனை உறுதிப்படுத்துவதற்கான பணிப்புரை விடுப்பதை பரிசீலிக்குமாறு தங்களை வேண்டுகின்றோம் என்றுள்ளது. (கு)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண கைத்தொழில் திணைக்களத்தினால் கரவெட்டி பிரதேச செயலாளர் ஊடாக கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள மின்னிணைப்பு, குழாயிணைப்பு ஆகிய பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதியானது 31.03.2006 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கல்வித்தகமையில் ஆண்டு 8 படித்தவர்களும் விண்ணப்பிக்கலாம் என்றும் விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கரவெட்டிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (கு)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யா/நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (க-132,133)

# 1500 புதிய பஸ்கள் விரைவில் சேவையில் ஈடுபடுத்தப்படும்

ஆயிரத்து 500 புதிய பஸ்கள் விரைவில் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் இது தவிர பழுதடைந்த ஆயிரத்து 500 பஸ்களைத் திருத்தி பாவனையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் இலங்கை போக்குவரத்து சபைத் தலைவர் டியு தயாரத்ன தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்திலுள்ள மூன்று பஸ் டிப்போக்களுக்கு புதிதாக 14 இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்த அடிப்படையில் இந்தியாவிலிருந்து ஆயிரம் பஸ்கள் பெற ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதுவரை 350 பஸ்கள் புதிதாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இது தவிர 180 சொகுசு பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. இரு தட்டு பஸ்கள் ஏற்கனவே சேவையில் இணைக்கப்பட்டுள்ளன.

ஆயிரத்து 500 பஸ்களை திருத்தி சேவைக்கு விடும் திட்டத்தின் கீழ் 488 பஸ்களை திருத்துவற்காக 100 மில்லியன் ரூபா அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் பஸ்களை திருத்துவதற்கா மேலும் 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் குறைவாக இருந்தன. அவற்றைத் நிர்வகிப்பதற்கான செலவும் ஊழியர் தொகையும் மிக அதிகமாகவே இருந்தன.

ஆனால் தற்போது நிலைமை மாறியுள்ளது. சகல டிப்போக்களும் சுறுசுறுப்பாக இயங்குகின்றன. பிரதேச வேலைத் தளங்களும் இயங்கத் தொடங்கியுள்ளன. 2-3 மாதங்களுக்குள் மேலும் 600 பஸ்கள் புதிதாக சேவையில் ஈடுபடுத்தப்படும். தனியார் பஸ்களை விட இ.போ.ச சிறந்த சேவை வழங்குகின்றது என்றும் தெரிவித்தார். (க-9)

# நாட்டை ஏமாற்றிய கூட்டமைப்புக்கு ஊரை ஏமாற்ற இடமளியோம்!

## என்ற தொனிப்பொருளில் ஐ.தே.க தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

நாட்டைஏமாற்றிய கூட்டமைப்புக்கு ஊரை ஏமாற்ற இடமளிக்க மாட்டோம் என்ற தொனிப்பொருளில் ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரம சிங்கவின் தலைமையில் நேற்று மத்துக்கம, கினிதும நகரங்களில் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றன.

எதிர்வரும் 27ஆம் திகதி வரை நாடு பூராகவும் இந்த பிரசார நடவடிக்கைகள் தொடருமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரசார நடவடிக்கைகளும் நேற்று ஆரம்பமானது. (க-9)

## நிதியுதவி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சிவன் கோயிலடியில் அமைக்கப்பட்டு வரும் கலாசார மண்டபத்துக்கு 2ஆம் கட்ட நிதிக் கொடுப்பனவாக 30 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே இக்கட்டடத்துக்கு 50 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் சாவகச்சேரி ஆவரம்பிட்டி முருகமூர்த்தி ஆலய புனரமைப்புக்காக 5 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது. இந்த நிதிக் கொடுப்பனவு தேச நிர்மாண மற்றும் அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்படுகிறது. (து-108)

## நிவாரணம் வழங்கல்

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாள் தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் தற்போது கொடிகாமம் ப.நோ.கூ.சங்கத்தில் வழங்கப்படுகிறது.

எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பாக அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு மக்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (து-108)

## வருடாந்த திருவிழா

காரைநகர் மணற்காடு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 15ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. (து-72)

# பல்கலைக்கழக சட்டத்துக்கு முரணாக நடந்தால் தொழிற்சங்க நடவடிக்கை

## துணை வேந்தருக்கு பல்கலை ஊழியர் சங்கம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் போன்றவர்கள் பல்கலைக்கழகத்தின் சுயாதிபத்தியத்தை இழிவு செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் இத்தகைய நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தவேண்டும். இல்லாவிடின் நாம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்கவேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர், பீடாதிபதிகள், பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர், பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அக்கடிதத்தில்,

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சுயாதிபத்தியத்தை இழிவு செய்யும் பல நடவடிக்கைகளை அண்மைக்காலமாக எடுத்துவருகின்றது. இவற்றுள் சில நடவடிக்கைகள் பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்களை நேரடியாகப் பாதிப்பனவாக உள்ளன.

1.பிரதம பாதுகாப்பு அதிகாரி நியமனம் தொடர்பாக பேரவையினால் சிபார்சு செய்யப்படாத ஒருவருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது நியமனக் கடிதத்தினை வழங்கியுள்ளது. துணைவேந்தர் ஊடாக அனுப்பப்பட்ட இந்நியமனக் கடிதத்தை சம்பந்தப்பட்டவருக்கு வழங்குமாறு உடனடியாகவே எவ்வித தயக்கமுமின்றி துணைவேந்தர் பணித்துள்ளார். பல்கலைக்கழகப் பேரவையால் சிபார்சு செய்யப்படாத ஒருவருக்கு நியமனத்தை வழங்க பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுக்கு அதிகாரமில்லையென நாம் சுட்டிக்காட்டிய பின்னரே துணைவேந்தர் இவ்விடயத்தை பேரவையின் பரிசீலனைக்கு விட நடவடிக்கை எடுத்தார்.

2.குற்றவியல் விசாரணை நடாத்தப்பட்டு பல்கலைக்கழகப் பேரவையினால் சேவை நீடிப்பு மறுக்கப்பட்ட வேறொரு உயர் அதிகாரியை மீண்டும் சேவைக்கால நீடிப்புடன் சேவையில் அமர்த்துவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நடவடிக்கை எடுப்பதாக பல்கலைக்கழகப் பதில் பதிவாளரே தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட இரு விடயங்களிலும் பல்கலைக்கழகத்தின் சுயாதிப்பத்தியம் மீறப்படுவதோடு மட்டுமன்றி பல்கலைக்கழக சேவைகள் பற்றிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உதாசீனம் செய்துள்ளது.

3.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 1990களின் ஆரம்பத்திலிருந்து இடம்பெயர்ந்து இதுவரை கடமைக்கு சமூகமளிக்காத சில ஆசிரியர்களுக்கு 15 வருடகால சம்பளத்துடன் மீள் நியமனம் வழங்குமாறு கட்டளையிட்டுள்ளது.

அதேவேளை 1995 போர்க்காலத்தில் இடம்பெயர்ந்து 2002இன் பின் மீளவும் பணிக்கமர்த்தப்பட்ட ஆசிரியர், ஊழியர்களுக்கு இடம்பெயர்ந்த கால சம்பளம் இற்றைவரை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகப் பேரவை, பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் உரிய அதிகாரிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக சட்டத்துக்கு முரணான இந்த எதேச்சதிகாரப் போக்கினை தொடர்ந்தும் அனுமதித்து அதற்கு அனுசரணையாளர்களாக இருப்பார்களேயானால் நாம் வேறு முன்னறிவித்தலின்றி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதென 16.03.2006 வியாழன் கூடிய எமது செயற்குழு தீர்மானித்துள்ளது.

இதனையே எமது தொழிற்சங்க நடவடிக்கையின் முன்னறிவித்தலாக ஏற்றுக்கொள்ளவும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)

# தேசியப் பாடசாலை ஆசிரியர்களில் 87 பேருக்கு பதவி உயர்வுகள்

யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களில் தகுதியான 87 பேருக்கு பதவியுயர்வு வழங்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்கள், ஆசிரியர்கள் நியமனம், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் என்பன மத்திய அமைச்சரினால் மட்டுமே இதுவரை காலமும் செய்யப்பட்டு வந்தது.

தற்போது வலயக் கல்விப் பணிப்பாளர்களால் பதவியுயர்வுகள் வழங்கப்படவுள்ளமை இதுவே முதற்தடவையாகும்.

யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களில் தகுதியான 87 பேருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

குற்றம் செய்யும் ஒவ்வொருவரும் தன் லட்சியத்தை அடையாது நெறி தவறியவனே.
-ஔரேலியன் மார்க்கஸ்

வலம்புரி

# சம்பிக்க ரணவக்கவிற்கு ஓர் அன்பு மடல்

அன்புசால் சம்பிக்க,

ஆங்கில நாளிதழுக்கு தாங்கள் அளித்த செவ்வி கண்டோம்.

அடேங்கப்பா இப்படியும் ஓர் வீரன். தென்னிலங்கையில் நிச்சயமாக தங்களை கௌதம புத்தரே அனுப்பி வைத்திருக்க வேண்டும்.

எனினும் ஓர் சந்தேகம். யாழ்ப்பாணத்திலிருந்து 40 ஆயிரம் சவப்பெட்டிகள் கொழும்புக்கு வந்தால் 4 லட்சம் தமிழர்களின் சவப்பெட்டிகள் கிளிநொச்சிக்கு அனுப்பி வைக்கப்படும் எனக் கூறியுள்ளீர்கள்.

இதிலிருந்து தங்களின் வீரம் பொதிந்த உணர்வு தெரிகின்றது. ஆனால், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அனுப்பப்படக் கூடிய 40 ஆயிரம் பேரும் யார் என்பதும் கொழும்பிலிருந்து நீங்கள் அனுப்பப்பட போவதாகக் கூறப்படும் 4 லட்சம் பேரும் யார் என்பதும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டியவர்களே யாழ்ப்பாணத்திலுள்ள 40 ஆயிரம் பேர் எனக் குறிப்பிடப்படுபவர் பாதுகாப்புப் படையினர்.

அவர்கள் ஆயுதம் ஏந்தியவர்கள்.அதைவிட யுத்த விமானம், பல்குழல் தாக்குதல் வசதிகள், பீரங்கி முழக்கங்கள் எனப் பல்வகை போராயுதங்களையும் தம்வசம் வைத்திருப்பவர்கள்.

இவர்கள் எதற்காக? சவப்பெட்டிகளில் தென்னிலங்கைக்கு வர வேண்டும். தங்களின் செவ்விக்குப் பின்னர் சற்றுச் சிந்தித்துப் பார்த்தேன்.

ஆம், நீங்கள் தான் உண்மையை உணர்ந்திருக்கின்றீர்கள். 40 ஆயிரம் படையினரையும் துவாம்சம் செய்யும் சக்தி விடுதலைப்புலிகளிடம் உண்டென்பதை வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

இந்த உண்மையை உங்களோடு இருக்கக் கூடிய மற்றையவர்கள் உணராமல் வெளிநாடுகளுக்குச் சென்று ஆயுதங்களை கொள்வனவு செய்கின்றார்கள்.

அவர்களை விட தாங்கள் ஒருபடி அரசியல் அறிவுடையவர்தான். யாழ்ப்பாணத்தில் ஆயுதம் தரித்த 40 ஆயிரம் படையினரைக் கொன்றால், நாங்கள் தென்னிலங்கையில் உள்ள 4 லட்சம் அப்பாவித் தமிழ் மக்களைக் கொல்வோம் என்று எச்சரிக்கை செய்கின்றீர்கள்.

இதை வெறும் வெற்றுப் பேச்சாக நாம் கருதவில்லை. ஏனெனில் 1983களில் அதைச் செய்து காட்டியவர்கள் அல்லவா நீங்கள்.

ஆனால் ஒன்று, இவ்வளவு வீறாப்புப் பேசும் தாங்கள், விடுதலைப்புலிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தைத் தாக்கியபோது, கொலனாவை எண்ணெய்க் குதத்தை எரியூட்டிய போது எங்கிருந்தீர்கள்? இதையறிய ஆவலாயுள்ளோம்.

# எரிக் சொல்ஹெய்மின் விலகல் பேச்சுக்களை தாமதப்படுத்தும்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையின் தலைமை அனுசரணையாளரான எரிக் சொல்ஹெய்ம் தனது நேரடிப் பொறுப்பிலிருந்து விலகுவதன் மூலம் பேச்சுவார்த்தையில் சில தாமதங்கள் ஏற்படலாம் என மாற்றுக்கொள்கை அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹான் எதிரி சிங்க தெரிவித்துள்ளார்.

புதிதாக இப்பொறுப்பினை பொறுப்பேற்பவர் சிறந்த முறையில் பணிகளை முன்னெடுத்துச்செல்வார் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

வேலைப்பளு காரணமாகவே எரிக் சொல்ஹெய்ம் ஏற்பட்டாளர் பணியிலிருந்து விலகிச் செல்கிறார். ஆனாலும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களில் தொடர்ந்தும் தனது பணியினை ஆற்றவுள்ளதாக அறிவித்துள்ளமை அறுதலைத் தருகின்றது என்றார்.

இதேவேளை, மன்ற அமைப்பின் தலைவர் கலாநிதி குமார் ரூபசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகயில் முழுநேர அனுசரணையாளர் பணியை மேற்கொள்ள ஒருவரை நியமித்தது வரவேற்கத்தக்க விடயமாகும்.

நாளாந்த முன்னெடுப்புக்களைப் புதியவர் செய்ய ஒழுங்குள் செய்யபட்டுள்ள பொழுதிலும் மேற்பார்வை நடவடிக்கைகளை எரிக் சொல்ஹெய்ம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவித்தார். (க-4)

# மீன் பிடித் தொழிலில் ஏற்படும் சிக்கல்களை நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

சர்வதேச கடற்பிராந்தியத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் போது ஏற்படும் சிக்கல்களை தீர்க்கும் பொருட்டு விசேட பிரதிநிதிகள் அடங்கிய 4 பேர் கொ.ண்ட குழுவொன்றை நியமிக்க கடற்றொழில் மற்ற ம நீரியல் வள அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, இந்தியாவின் கேரளா மாநிலத்திற்கு சொந்தமான கடற்பகுதியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட 10 இலங்கை மீனவர்களை விடுவிக்கும் பொருட்டு பிரதிநிதிகள் குழுவொன்று அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அக்குழு கேரளா மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கை மீனவர்களை அழைத்துவரும் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச கடல் எல்லையில் மீன்பிடியில் ஈடுபடும் போது இலங்கை மீனவர்கள் இந்தியப் படையினரினால் கைது செய்யப்படுகின்றார்கள் இவ்வாறு கைதுசெய்யப்படும் மீனவர்கள் அந்த நாட்டின் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவதற்கு முன்னர் விடுவிக்கப்படுவதற்காக இந்த விசேட திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டால் அவர்களை விடுவிப்பதில் சிரமங்கள் ஏற் படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் இது தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் என்றும் குறிப்பிட்ட அவர் விரைவில் மாலைதீவுடனும் இது போன்ற இணக்கப்பாட்டை காணுவதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கை கடற்பகுதியில் கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை விடுதலை செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# கிளிநொச்சி சோலைநகர் கிராமத்தில் கிராம அபி.செயலக கட்டடம் திறப்பு

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் கிளிநொச்சி சோலைநகர் கிராமத்தில் கிராம அபிவிருத்திச் செயலகக் கட்டடத் தொகுதி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

சமுதாய மீள் கட்டமைப்புத்திட்டத்தின் சோலைக் கிராம இணைப்பாளர் புஸ்பகலா தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

பொதுச் சுடரேற்றல் மற்றும் மங்கல விளக்கேற்றலுடன் ஏனைய நிகழ்வுகள் தொடங்கின. தமிழீழத் தேசியக் கொடியினை சோலைநகர் கிராம ஊரக வளர்ச்சி பொறுப் பாளர் பரந்தாமனும், தமிழர் புனர்வாழ்வுக்ககழகக் கொடியை தமிழர் புனர்வாழ்வுக்கழக சமுதாய மீள் கட்டமைப்புத் திட்டத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வி.நாகரூபனும் ஏற்றி வைத்தனர்.

செயலகப் பொதுக் கட்டடத்தின் பெயர் பலகையை உதவி அரசாங்க அதிபர் சுலோஜினி திரை நீக்கம் செய்து வைத் தார்.

செயலகப்பொதுக்கட்டடத்தை வடக்கு-கிழக்கு மாகாண சமுதாய மீள் கட்டமைப்புத் திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப் பாளர் புவனேந்திரன் மற்றும் உதவி அரசாங்க அதிபரும் இணைந்து நடாவை வெட்டித் திறந்துவைத்தனர்.

சமூகப் பொருளாதார அபிவிருத்திச் சங்க கட்ட டத்தை சமுதாய மீள் கட்டமைப்புத் திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட பிரதித் திட்ப் பணிப்பாளர் குகதாசன் திறந்துவைத் தார்.

நூலகக் கட்டடத்தை புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் சு.சிவனொளிபாதம் திறந்து வைத்தார்.

கிராம அலுவலகக் கட்டடத்தை சோலைநகர் கிராம சேவையாளர் சிவநேசன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

வரவேற்புரையைத் தொடர்ந்து ஆசியுரையினை கிராம சேவகர் சி.சிவநேசன் வழங்கினார். உதவி அரசாங்க அதிபர் தமிழர் புனர்வாழ்வுக்கழக சமுதாய மீள்கட்டமைப்புத் திட்டப் பணிப்பாளர் சுடர் ஊரக் வளர்ச்சிப் பொறுப்பாளர் பரந்தாமன் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர்.

பிரதித்திட்ப் பணிப்பாளர் புவனேந்திரன் சிறப்புரையை நிகழ்த்தினார் நிகழ்வில் தொடர்ந்து கிராம மக்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

சோலைநகர் கிராமமானது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள கிராமங்களில் ஒன்றாகும். சமூகப் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட இக் கிராமமானது நீண்டகாலப் போர்ச் சூழ்நிலைகளால் மேலும் பல பின்னடைவுகளுக்குள்ளானது.

இதனையடுத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கணிசமான நிதியை ஒதுக்கி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப்பங்களிப்புடன் வடக்கு-கிழக்கு சமுதாய மீள் கட்டமைப்புத்திட்டத்தின் கீழ் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள் புனரமைப்புத்திட் டத்திற்கமைய இக்கட்டடத்தை நிறுவியுள்ளது.

இக்கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள், பணியாளர்கள் , சமுதாய மீள் கட்டமைப்புத் திட்டப் பிரதிநிதிகள், பணியாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமள வானோர் கலந்து சிறப்பித்தனர். (கு)

# கொழும்பில் நால்வர் கைது

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்கள் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டியில் 45 இலட்சம் ரூபா ரொக்கப் பணம் மற்றும் தங்க ஆபரண கொள்ளைச் சம்பவத்துடன் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாக கொழம்பு குற்றத் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து சுமார் 20 இலட்சம் ரூபா ரொக்கப்பணம் மீட்கப்பட்ட தாகவும் அவர் தெரிவித்தார். (கு)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வர்த்தகர்கள் யாழ்ப்பாண இலங்கை வங்கிகளில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராயும் பொருட்டு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு யாழ்.வணிகர் கழகப் பணிம்மனையில் க்லந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.


யாழ்ப்பாண இலங்கை வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கு இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தர இருப்பதனால் இலங்கை வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வர்த்தகர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது. (க-9)

# பொதுக்கூட்டம்

(கற்கோவளம்)

வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்க பருத்தித்துறைக் கிளையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை பகல் 12.00 மணியளவில் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தில் தலைவர் எஸ்.ஏ.உதய சூரியன் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-104)

தினசரி தியானம்
விவேகச் சிந்தனைகள்



ஆத்மா ஆட்சி புரியவல்லது. உள்ளத்தில் பிரகாசிப்பது. உடலோ ஆளப்படுவது; புறத்தில் இருப்பது. ஆக இந்த இரண்டும் ஒன்று என்று நினைப்பது அஞ்ஞானமேயன்றி வேறில்லை.

சுவாமி விவேகானந்தர்



தமிழீழ காவல்துறைப் படையணியின் புதிய அணிக்கான பயிற்சி நேற்று ஆரம்பமானது. தமிழீழ காவல்துறைப் பயிற்சிக் கல்லூரியில், கல்லூரிக் கண்காணிப்பாளர் தமிழரசன் தலைமையில் நேற்றுக் காலை 7 மணிக்கு பயிற்சிகள் ஆரம்பமாகின. பயிற்சியில் ஈடுபடும் அணியினரைப் படத்தில் காணலாம்.

## மகிந்தவின்...

போதே இதனைத் தெரிவித்தார்.

முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைக் காத்துக் கொண்டு மகிந்தவின் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவினை வழங்க சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித் துள்ளது.

நாட்டில் நிரந்த சமாதானம் ஏற்பட வேண் டும் என்று நாட்டில் உள்ள மக்கள் விரும்பு கின்றனர். அதனை அடைவதற்கு சில அரசி யல் கட்சி கள் தடையாகவிருக்கின்றன.

மகிந்த ராஜபக்ஷவைத் தேர்தலில் வெற்றி பெறச்செய்ய வேண்டும் என்று செயற்பட்ட சில அரசியல் கட்சிகள் இப்போது பழைய பல்லவிகளைப் பாடத் தொடங்கியுள்ளன.

அக் கட்சிகள் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புக் காட்டி வருகின்றமை வேதனைக்குரியது என பசீர் சேகுதாவூத் மேலும் தெரிவித்தார். (ச)

## மட்டக்களப்பில்...

இவர்களில் பரமேஸ்வரநாதன் என்பவர் மனிதநேய கண்ணி வெடி அகற்றும் பிரிவில் இணைப்பாளராகவும் இலங்கைச் செஞ் சிலுவை சங்க உறுப்பினராகவும் கடமை யாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் கல்லடியில் வசித்து வருபவர். அவ ரது வீட்டிற்கு இரவு 1.30 மணியளவில் வெள் ளை நிற டொல்பின் ரக வாகனத்தில் வந்த ஆயுததாரிகள் சுமார் ஒரு மணி நேரம் வரை அவரது வீட்டில் சோதனை நடவடிக்கை களை மேற்கொண்டிருந்தனர் எனவும் அதன்பின்னர் அவரையும் மேலும் மூவ ரையும் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப் பட்டது. (ச-4)

## உள்ளூராட்சி...

பார்க்கப்படுகின்றது.

அதேவேளை தமிழீழ விடுதலைப்புலிக ளின் நிர்வாகப் பிரதேசத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டு மென பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர் னாண்டோ வேண்டுகோள் விடுத் துள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணை யாளர் தயானந்த திஸாநாயக்கவுக்கு முப்படைத் தளபதி தயா சந்தகிரி ஊடாக கடிதம் ஒன் றை சந்திரா பெர்னாண்டோ அனுப்பியுள் ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கொத்தணி வாக்குச் சாவடிக்ளை அமைத்ததுபோன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படாத நிலை யில் விடுதலைப்புலிகளின் பிரதேசத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் தங்களால் பாது காப்பு வழங்க முடியாது என்றும் அந்தக் கடிதத்தில் சந்திரா பெர்னாண்டோ கூறியுள் ளார். (ச-4)

## மீன்பிடிப்பதற்கு...

அவை யுத்தநிறுத்த ஒப்பந்த காலத்தில் 2005 டிசம்பருக்கு முன்னர் அதிகாரபூர்வ மற்ற வகையில் தளர்த்தப்பட்டிருந்தன.

ஆனால் கடற்படையின் படகு தாக்கப் பட்ட பின்னர் கடற்படையினர் அம் மீன்பிடிக் கட்டுப்பாடுகளை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வந்தனர்.

ஆனால் அண்மைக் காலமாக அக் கட் டுப்பாடுகள் மீண்டும் தளர்த்தப்பட்டன. ஆனால் தற்போது அங்கிருக்கின்ற தளபதி கள் இவ் விடயம் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றார்கள்.

அதற்கு சிறு காலம் பிடிக்கும். சரியாக எந்தெந்தப் பகுதிக்குப் போகலாம், எங் கெங்கு மீன்பிடிக்கலாம் என்று அவர்கள் முடிபு செய்வார்கள்.

இன்னும் இரண்டு மூன்று நாட்களில் அநேகமாக அடுத்த வாரத்தில் இவ்விவகா ரம் தீர்த்து வைக்கப்படும். இவ்விடயத்தினை கையாளுமாறு கடற்படையினருக்கு ஏற்க னவே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

ஆகவே கடற்படையினர் இதற்கான நட வடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற னர் என அவர் தெரிவித்தார்.

மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான சில பகுதிகளை திறந்துவிட அவர்கள் நிச்சய மாக ஏற்பாடுகள் செய்வார்கள் என பிரசாத் சமரசிங்க மேலும் தெரிவித்தார். (ச-4)

## ஜோன் ஹன்ஸ்ஸ...

வேளை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் நடைபெறவுள்ள பேச்சுகளுக்கு எரிக் சொல்ஹெய்மே தலைமை தாங்குவார் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அப் பதவியிலி ருந்து ஒதுங்குவதானது இலங்கையின் சமா தான முன்னெடுப்புகளில் தேக்க நிலையைத் தோற்றுவித்து, நாட்டில் குழப்பமான சூழலை ஏற்படுத்தி விடும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

## அன்னை...

தேசியக் கொடி ஆகியன ஏற்றப்படும்.

பின்னர் அன்னை பூபதி மற்றும் நாட்டுப் பற்றாளர்களின் உருவப் படத்திற்கு சுடர் ஏற்றி, மாலை இட்டு, மலர் தூவி அகவணக் கம் செலுத்தப்படும்.

ஏப்ரல்19 ஆம் திகதி வரை இந் நிகழ் வுகள் பிரதேச ரீதியாக நடை பெறும். ஏப்ரல் 17,18,19 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் உண்ணாவிரத நிகழ்வு பிரதேச ரீதி யாக மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. (ச-4)

## 60 மாதங்கள் அமெரிக்க சிறையில் வாடிய யாழ்ப்பாண இளைஞன் விடுதலை ஆனார்

(கொழும்பு)

அமெரிக்காவுக்கு அகதியாகச் சென்ற ஈழத் தமிழ் இளைஞர் ஒருவர் சட்டவிரோத மாக நாட்டிற்குள் உட்புக முயற்சித்தார் என்ற காரணத்திற்காக ஐந்து வருடங்கள் சிறை யில் அடைக்கப்பட்ட பின்னர் நேற்று முன் தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அகிலன் நட ராஜன் (வயது-25) என்ற இளைஞனே விடு தலை செய்யப்பட்டவர் ஆவார். விடுதலைப் புலி உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் அரச படையினர் தன்னைச் சித்திரவதை செய்ததுதான் அமெரிக்கா வரக் காரணம் என்று கூறியுள்ளார்.

ஆனால், அவர் மீது எதுவித குற்றச்சாட் டுக்களையும் தாக்கல் செய்யாது விசாரணை என்ற அடிப்படையில் அமெரிக்க அதிகாரி களால் நேற்று முன்தினம்வரை சிறையில் அடைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட் டது.

அவரது வழக்கினை விசாரித்த நீதிபதி அமெரிக்க உயர் நீதிமன்ற ஆய்வுகளுக்க மைய அவரது சிறைவாசம் அமெரிக்கச் சட் டத்திற்கு விரோதமானதென்று தீர்ப்பளித்து அவரை சிறையில் இருந்து விடுதலை செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வழமையாக இத்தகைய வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஒருவரை ஆறு மாதம் காலம் வரையே சிறையில் அடைக்கச் சட்டம் அனு மதித்திருந்ததும் தமிழ் இளைஞர் அறுபது மாதங்கள் சிறையில் இருந்தது வேதனைக் குரியது. எந்தவிதமான காரணங்களாலும் இத் தண்டனையை நியாயப்படுத்த முடியாது என்று அவர் தனது தீர்ப்பில் கூறியுள்ளார். (ச)

## 'ராஜன் கதிர்காமர்' கிண்ணத்தை பத்திரிசியார் கல்லூரி சுவீகரித்தது

(யாழ்ப்பாணம்)

புனித பத்திரிசியார் கல்லூரியணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்குமிடையில் 'ராஜன் கதிர்காமர்' கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பத்திரிசியார் கல்லூரி அணி 51 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பத்திரிசியார் கல் லூரியணி முதலில் துடுப்பெடுத்தாட களம் இறங்கியது.

இதனடிப்படையில் துடுபெடுத்தாடிய பத் திரிசியார் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறை வில் 9 விக்கெட்டினை இழந்து 177 ஓட்டங் களைப் பெற்றது.

இவ்வணி சார்பில் றெக்னோ ஆட்டமிழக் காமல் 46 ஓட்டங்களையும் லூட்சன் 32 ஓட்டங்களையும் யேந்திரன் 23 ஓட்டங்க ளையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்த னர்.

பந்து வீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பில் அணித் தலைவர் ஜெனார்த் தனன், ஜோயில் சௌகான் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

178 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய யாழ்ப்பா ணக் கல்லூரியணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டினையிழந்து 126 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் மயூரன் 37 ஓட்டங்களையும் சசி தரன் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பத்திரிசியார் கல்லூரி அணி சார்பில் றெக்னோ மூன்று விக்கெட்டுக்க ளையும் கொலின் , மரின்குமார் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாகவும் சிறந்த சகலதுறை வீரராக பத்திரிசியார் கல் லூரி அணியின் றெக்னோவும், சிறந்த துடுப் பாட்ட வீரராக யாழ்ப்பாணக் கல்லூரியின் மயூரனும் சிறந்த களத்தடுப்பாளராக யாழ்ப் பாணக் கல்லூரியின் நிரோஜனும் சிறந்த பந்து வீச்சாளராக பத்திரிசியார் கல்லூரியின் கொலினும் தெரிவு செய்யப்பட்டனர். (ச-5)

## புலிகளின் தடையை நீக்க ...

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிக ளும் மீண்டும் தொடங்கியுள்ள பேச்சுவார்த் தை மூலமாக இலங்கைத் தீவில் அமைதி யும் அரசியல் நிலைத்தன்மையும் உருவா கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது.

தற்போதைய அமைதிப் பேச்சுக்கள் தொடர்பில் சிறிது சாதகமான நம்பிக்கை யுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக பேச் சுக்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. தற்போது இருதரப்பும் மீண்டும் பேசத் தொடங்கியிருப் பதால் அந்தச் சாதகமான நம்பிக்கை வெளிப் படுகின்றது.

கடந்த 23 ஆண்டுகால போரிலிருந்து ஒவ்வொருவரும் ஓய்ந்துபோய் இருக்கின் றனர். ஜெனீவாப் பேச்சுக்களின் முடிபுகள் உற்சாகம் அளிக்கும் வகையில் உள்ளன. இரு தரப்பினரும் வன்முறைகளை இடை நிறுத்தி யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர் ந்து கடைப்பிடிக்க ஒப்புக் கொண்டுள்ளனர்.

அரசார்பற்ற ஆயுதக் குழுக்களின் செயற் பாடுகளை முடிபுக்குக் கொண்டுவர அரசாங் கம் ஒப்புக் கொண்டுள்ளது. இலங்கை அர சாங்கத்தை அமெரிக்கா ஆதரிப்பது உறுதி யாகவுள்ளது. 2005 ஆம் ஆண்டின் இறுதி யில் விடுதலைப்புலிகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொறுமை காத்தமைக்கு அமெ ரிக்கா பாராட்டுகின்றது.

இனப்பிரச்சினை நீடித்தாலும் ஊடக சுதந்திரம் உள்ளிட்ட வலிமையான ஜனநா யக நிறுவனங்களுடனும் பாரம்பரியத்துட னும் முழுமையரக இயங்கி வருகின்றது. 2005 ஆம் ஆண்டு நவம்பரில் ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழீழ விடுதலைப்புலி கள் தேர்தலைப் புறக்கணித்து வாக்காளர்க ளை தங்களது பகுதிகளில் வாக்களிக்க விடா மல் தடுத்தபோதும் நீதியாகவும் நியாயமான தாகவும் நடத்தப்பட்டதாக சர்வதேச பார்வை யாளர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இலங்கை இனப்பிரச்சினையில் தொடர் புடைய அனைவருமே மனித உரிமை மீறல் குற்றச்சாட்டிற்கு உரித்துடையவர்கள். தற் போதைய தாக்குதல் நடவடிக்கைகளையும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவ தையும் முற்றாக நிறுத்தியுள்ளதாக அமெ ரிக்காவை விடுதலைப்புலிகள் ஏற்க வைக் கும் போது அவர்கள் மீதான பயங்கரவாத முத்திரையை அகற்றுவது பற்றி பரிசீலிக்கப் படுவது சாத்தியம்.

ஆனால், அவர்களது நோக்கங்களின் நியாயப்பாட்டை தெரிவிக்கும் தெரிவிக்கும் எதுவித காரணத்தையும் எமக்கு அவர்கள் தெரியப்படுத்தவில்லை. கடந்த 2004 ஆம் ஆண்டு ஆழிப் பேரலைக்குப் பின்னர் இலங்கையின் பொருளாதார நிலைமை சீர டைந்திருந்தது.

தற்போதைய உள்நாட்டு யுத்தம் நீடித் தால் இலங்கையின் உட்கட்டமைப்பு, மின் சாரக்கட்டணம், பணவீக்கம் மற்றும் அரச மானியங்கள் ஆகியவற்றில் பாரிய சீர்குலை வைச் சந்திக்க நேரிடும் என டேவிட் காம்ப் மேலும் தெரிவித்தார். (ச-4)







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 19.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.